www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் ☐ இதழ் 17 ☐ சிறுவர் தேசம் (04) ☐ மார்ச் 04 - ஏப்பிரல் 04 ☐ ISSN 1474 - 8770






## புலிக்குள் பூகம்பம்



## ஈழம் ஈடாட்டம்






**சர்வதேச பெண்கள் தினம்**

தற்காப்புப் பயிற்சி பெறும் வீராங்கனைகள்

**வம்பவாரிசு ஜெயராஜ்**

ஆருக்கு வைக்கிறார் ஆப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இளைஞர் மரணம் ஒருவர் கைது

8 இளைஞர்களின் தாக்குதலினால் உயிர் ஆபத்தான நிலையில் இருந்த மகேஸ்வரன் கணேசன்(26) என்பவர் பொங்கல் தினத்தன்று மரணமானார். ஈஸ்ற்காமைச் சேர்ந்த இந்த இளைஞரின் கொலை தொடர்பாக சிவலிங்கம் சிவகுமார் (31) என்பவர் கைது செய்யப்பட்டு பெப்ரவரி 9ல் குரொய்டன் மஜிஸ்ரேட்நீதிமன்றில் நிறுத்தப்பட்டார்.

### இவ்வாண்டின் சிறந்த மருத்துவர்



Dr குலரஞ்சன் (48) இவ்வாண்டு இலண்டனின் சிறந்த மருத்துவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# TR-TEC விசாரணைகள் பூர்த்தி

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சர்ச்சைக்கு உள்ளாகி இருந்த TR-TEC அமைப்பு மீதான விசாரணை பெப்ரவரி 4ல் முடிந்து உள்ளது. சில அறிவுறுத்தல்களை வழங்கி தர்ம ஸ்தாபனங்களின் ஆணைக்குழு விசாரணையை மூடியுள்ளது.

£500,000 நிதிப்புரள்வுள்ள இவ்வமைப்பில் மோசடி, அதிகார துஸ்பிரயோகம், முறைகேடான நிர்வாகம் எனப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு இருந்தது. மேலும் நியாயமற்ற முறையில் அ திருமாறன் வேலை நீக்கப்பட்டதற்காக கடந்த ஆண்டு முற்பகுதியில் TR-TEC £21,000 நட்டஈடு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வமைப்பில் நிதிப் பொறுப்பாளராக இருந்த கனகராஜா இவ்வமைப்பில் நிதி மோசடி இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு பதவி விலகினார். மாசிலாமணி என்ற மற்றொரு உறுப்பினரும் பதவி விலகி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பில் இடம்பெற்ற ஊழல் குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்திய ரி ஜீவரட்ணம் அவ்வமைப்பில் இருந்து தூக்கப்பட்டார். இவ்வமைப்பு நிர்வாகத்தில் உள்ள சில தனிநபர்களின் எதேச்சாதிகாரத்தில் இயங்குவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது.

### ரீபிசி மீண்டும் :

சில மாதங்களாக நிதி மற்றும் உட் குழப்பங்களால் மூடப்பட்டு இருந்த ரிபிசி வானொலி மீண்டும் வானலைக்கு மார்ச் 1 முதல் வந்து உள்ளது.

# ∴ ttn இன் பயணம் தொடரும்

வி.புலிகளின் பிரச்சாரப் பீரங்கியாக இயங்கிய ரிரிஎன் தொலைக்காட்சி நிதி நெருக்கடிக்குள் உள்ளாகியது. அதனால் பிரான்ஸ் அரசின் காபந்து நிர்வாகம் அதனைப் பொறுப்பேற்று இறுதி முடிவெடுக்க இருந்தது.

இதற்கு முன்னர் ரிரிஎன்னும் அதன் பிரதான போட்டியாளரான தீபம் தொலைக்காட்சியும் பிரான்ஸ் நீதிமன்றத்தில் படங்களின் வெளியீட்டு உரிமை தொடர்பாக மோதிக்கொண்டன. கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இவ்வழக்கு முடிவடைந்தது. இரு தரப்பினருமே அதனை அடக்கி வாசித்தனர். மேலும் ரிரிஎன் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கியது, கட்டிடத்தின் வாடகை கட்டப்படாதது, வரிகள் செலுத்தப்படாதது தொடர்பான விடயங்கள் பிரான்சின் தேசியப் பத்திரிகையில் வெளியானது.

தேசிய ஊடகங்களைப் பாதுகாப்பதற்கான நிதி திரட்டலை ரிரிஎன்னும் சகோதர நிறுவனமான ஐபிசி வானொலியும் முடிக்கிவிட்டன. ரிரிஎன் தொலைக்காட்சியை விற்பதற்கு காபந்து நிர்வாகம் திட்டமிட்டது. அதை வாங்குவதற்கு தீபத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் மீண்டும் புலிகள் சார்பானவர்களே ரிரிஎன் ஐ வாங்கி உள்ளார்கள்.

ரிஆர்ரி என்று இயங்கிய தொலைக்காட்சியே 3 ஆண்டுகளுக்கு முன்னர் புலிகளுக்கு ஆதரவான சிலரால் பொறுப்பெடுக்கப்பட்டு ரிரிஎன் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ரிஆர்ரியில் 14 பேர் வரை முதலீடு செய்திருந்தனர். ரிரிஎன் தொடர்ந்து 3 ஆண்டுகள் நட்டத்தில் இயங்கியதாகக் காட்டப்பட்டதாலும் கட்டிடத்தின் வாடகை செலுத்தப்படாததாலும் பிரான்ஸ் அரசு தலையீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது..

### இளைஞரின் இறுதி ஊர்வலம்

கடந்த ஆண்டு ஒக்ரோபர் 30 தமிழ் இளைஞர்களின் வன்முறைத் தாக்குதலில் கொல்லப்பட்ட சோதிலிங்கம் திருக்குமாரின் இறுதிக் கிரியைகள் பெப்ரவரி 21 அன்று குரொய்டனில் இடம்பெற்றது. யாழ் அளவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட இவரின் அஞ்சலியில் இலங்கையில் இருந்து வந்திருந்த அவரின் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

இவரின் கொலை தொடர்பாக சுகந்தன் நடராஜா(24), சாந்தன் விஜயகுமார் தர்மலிங்கம்(28), ரஞ்சன் சண்முனநாதன்(26), மோகனராஜா தங்கராஜா(28) சசிகரன் செல்வரட்ணம் (21) ஆகியோர் கைது செய்யப்பட்டு கொலைக் குற்றம் பதியப்பட்டது.

### உணவுநஞ்சாகி வாலிபர் மரணம்

இங்கிலாந்தில் ரொரன்ரன்கீத்தில் வசிக்கும் யாழ் வலிபர் செல்வலிங்கம் பாஸ்கரலிங்கம் (27) பெப்.22 அன்று உயிரிழந்தார். உணவு நஞ்சடைந்தமையே காரணம் எனக் கருதப்படுகிறது. Food Poisoning என்பது நஞ்சு கலந்த உணவு எனத் தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு செய்தி வெளியிடப்பட்டதால் அக்குடும்பத்தினர் அதிர்ச்சியும் இரட்டிப்பு வேதனையும் அடைந்து உள்ளனர்.

### மானிப்பாய் இந்து பிளவு

மானிப்பாய் இந்துக் ப.மாணவர் அமைப்பு பிளவுபட்டது. குமாரராஜன், ரவீந்திரமோகன் அணியினருக்கு இடையே உடன்பாடு காணப்படாததால் ஜனவரி 24ல் இடம்பெற்ற கூட்டத்தில் இது பிளவுண்டது பிரிந்து சென்றவர்களின் கலாச்சார நிகழ்வுமே அல்லது யூனில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. கல்லூரிக்கு உதவுவதே தம் நோக்கம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்

www.tamilarangam.net



# புலிக்குள் பூகம்பம்

# ஈழம் ஈடாட்டம்

த ஜெயபாலன்

கேணல் கருணாவுக்கும் புலிகள் அமைப்பிற்கும் இடையே இருந்த முரண்பாடு மார்ச் 2ல் முழுஅளவில் வெளிப்பட்டு இன்று ஈழ மக்களை இரு முகாம்களாகப் பிளவுபடுத்தி உள்ளது. தான் புலிகளது தலைமையுடன் அதாவது யாழ் அல்லது வன்னித் தலைமையுடன் முரண்பட வேண்டியதற்கு தலைமையிடம் இருந்த பிரதேசரீதியான ஒடுக்கு முறையே காரணம் எனக் கருணா குறிப்பிட்டு உள்ளார். கருணா என்ற தனிமனிதன் சரியான நபரா? அல்லது பிழையான நபரா? முற்போக்குவாதியா? பிற்போக்குவாதியா? என்பது இரண்டாம் பட்சமாகி கருணா ஒடுக்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களது பிரதிநிதியாகி விட்டமை கருணா பிரிந்து வந்த சில தினங்களி லேயே நிருபணமாகி உள்ளது.

நீறுபூத்த நெருப்பாக கிழக்கு மாகாண குறிப்பாக மட்டக்களப்பு மக்களால் உணரப்பட்டு வந்த யாழ் மேலாதிக்கவாதத்துக்கு எதிராக கருணா தலைமை தாங்க முன் வந்ததே இதற்குக் காரணம். இந்த அணியில் புலிகளின் ஜனநாயக விரோதப் போக்கால் பாதிக்கப்பட்ட பலரும், யாழ் மேலாதிக்கத்தை எதிர்க்கின்றவர்களும் அணி சேர்ந்து உள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தித் தருவார்கள் என்ற நம்பிக்கையில் உள்ள பலரும் புலிகளுக்கு இடையே ஒடுக்குமுறை இருந்தாலும் ஒரு தீர்வு கைகூடி வரும் நிலையில் கருணா ஏற்படுத்தி உள்ள பிளவு வரலாற்றுத் தவறு என வாதிடுகின்றனர்.

புலிகளின் துப்பாக்கிகளின் நிழலின் கீழ் சாதியம் தூங்கிக் கொண்டிருப்பதாக ஒரு கவிஞன் குறிப்பிட்டான். சாதியம் மட்டுமல்ல பிர தேசவாதமும் தூங்கிக் கொண்டிருந்து என்பதை கருணாவின் வெளியேற்றம் காட்டியுள்ளது. துப்பாக்கிகள் ஓய்வெடுத்ததுமே அவை விழித்தன.

இன்று பிரதேச ஒடுக்குமுறைக்கு எதிராக கருணா கிளர்ந்து எழும்பியது கருணாவின் தவறோ அல்லது மட்டக்களப்புப் போராளிகளின் தவறோ அல்ல. அது அவர்கள் சார்ந்த அமைப்பின் தவறு. இவ்வாறான பிரதேச ரீதியான பாரபட்சத்தையும் ஒடுக்கு முறையையும் அவ்வமைப்பு ஆரம்பத்திலேயே இனம்கண்டு அதற்கான தீர்வை முன் வைத்திருக்க வேண்டும். ஒரு போராளி தான் பாரபட்சமாக நடத்தப்படுவதாக உணர்ந்தால் அதனை முறையிடுவதற்கும் அவ்வாறான அம்சங்களை நீக்குவதற்குமான ஒரு ஜனநாயகச் செயன்முறை இருந்திருக்க வேண்டும்.

அமைப்பின் சகல மட்டங்களிலும் பிரதேச மற்றும் சமூகங்களுக்கு இடையேயான சமத்துவத்தை அவ்வமைப்பு பேணி இருக்க வேண்டும். ஆனால் இங்கு கருணா என்ற தனிமனிதன் மட்டுமல்ல ஒரு சமூகமே தாங்கள் ஒடுக்கப்படுவதாக உணர்ந்து உள்ளது. இது அப்போராட்டத் தலைமக்கு ஏற்பட்டுள்ள தலைகுனிவாகும். இது புலிகளில் மட்டுமல்ல அனைத்து தமிழ் அமைப்புகளிலும் காணப்படுகின்ற குறைபாடு. இவை பற்றிய மீளாய்வை ஒவ்வொரு அமைப்பும் மேற்கொள்ள வேண்டும்.

## கேணல் கருணா

இயற்பெயர் : முரளிதரன் விநாயகமூர்த்தி

வயது : 37

பிறப்பிடம் : மட்டக்களப்பு

புலிகளில் இணைவு : 1983

இராணுவத் தேர்ச்சி : இணைந்து சில ஆண்டுகளிலேயே உயர்மட்ட கொமாண்டர் ஆனார். ஜெயந்தன் படையணியை உருவாக்கியவர்.

1997 - 98ல் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை முன்னின்று நடத்தியவர். யாழ் மீட்பு யுத்தத்தில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆனையி றவுத் தளத்தை கைப்பற்றினார். 2003ல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புக் கொமாண்டராக நியமிக்கப்பட்டார்.

2003ல் பாங்கொக், ஒஸ்லோ, ரோக்கியோ ஆகிய இடங்களில் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டார். அண்மைக் காலங்களில் கிழக்கு மாகாணம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி பத்திரிகை யாளர்களுடன் பேசி உள்ளார்.

18,000 போராளிகளைக் கொண்ட புலிப்படையில் உள்ள 7 கேணல்களில் இவர் ஒருவர். இவரது நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் படையணியில் 6,000 - 8,000 போராளிகள் உள்ளதாக மதிப்பிடப்படுகிறது. புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு எதிராகப் படை நகர்த்திய புலிகளின் ஒரே தளபதி இவர்.

www.tamilarangam.net



ஆனால் தாம் ஒடுக்கப்படுவதாக முறையிட்ட பின்னரும் அதனைத் தட்டிக் கழித்து தனிநபரின் பிரச்சினை என அறிவித்து இருப்பது அநீதி யானது. கருணா என்ற போராளிக்கு துரோகி என்ற முத்திரையைக் குத்தி அவரைத் தண்டிக்க முற்படுவதன் மூலம் அவர் இன்று பிரதிநிதித்துவப் படுத்தும் சமூகத்தையும் தண்டிக்க முற்படுகின்றனர்.

புலிக்குள் ஏற்பட்ட இந்த பூகம்பத் தால் ஈழம் ஈடாடி விட்டது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ ஈழ விடுதலைப் போராட்டம் இன்னுமொரு பரிமாணத்திற்குச் சென்று விட்டது. 35 ஆண்டுகளுக்கு முன்னர் இராஜ துரையை எப்படி கூட்டணி பழிவாங்கி யதோ அதே வரலாறு கருணா விடயத்தில் மீண்டும் நிகழ்ந்துள்ளது என்றே உணரப்படுகிறது.

ஏப்ரல் தேர்தலில் தங்கள் ஏகபிரதி நிதித்துவத்தை உலகறியச் செய்ய புலிகள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை களத்தில் இறக்கி உள்ளனர். தேர்தலுக்கு ஒரு மாதமே இருக்கும் நிலையில் அவர்களுடைய அமைப்பிற்குள்ளேயே அவர்களது பிரதிநிதித்துவம் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு உள்ளது. புலிகள் தங்கள் கட்டமைப்புப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் வந்துள்ளது. அதனை மறுப்பது வரட்டுத்தனமானது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இயக்கப் படுகொலைக ளும் இயக்க மோதல்களும் புதிதல்ல. தங்களை நம்பி ஆயுதம் ஏந்திய போராளிகளுக்காகவாவுதல் அந்த வரலாற்றை மீண்டும் அரங்கேற்றாமல் இருக்க கருணா - பிரபா இரு தலைவர்களும் முன்வர வேண்டும்.

யாழ் மேலாதிக்கவாதம் வரலாற் றுத் தொன்மை வாய்ந்தது. அதற்கு கருணாவின் அதிர்ச்சி வைத்தியம் தீர்வாகாது. தொடர்ச்சியான போராட் டம் அவசியம். ஏற்றத் தாழ்வற்ற சமூகக் கட்டமைப்பை நோக்கி சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகப் போராட்டத்தை நகர்த்த வேண்டும்.

# கருணா தனது கடிதத்திலும் வெளியிட்ட பிரசுரத்திலும் வைத்த குற்றச்சாட்டுகள்:

1. இந்த அமைதியான காலங்களில் எந்தவொரு வீரனும் தனது சொந்த இடத்தில் இருப்பதையும் தனது உற வுகளோடு இருப்பதையுமே விரும்பு வான். இது பற்றி வன்னிப் பொறுப் பாளர்கள் எவராவது சிந்திக்கின் றார்களா? இன்று இந்த வாய்ப்பான காலத்தில் அந்தப் போராளிகள் எது வித வளர்ச்சியும் அற்ற நிலையில் காவல் அரண்களிலேயே முடக்கப்பட் டுக் கிடக்கின்றார்கள். இனி ஒரு போதும் இங்கிருந்து படை நகர்த்துவ தையோ, இங்குள்ள வீரர்கள் யாழிலும் வன்னியிலும் வந்து மடிவதையோ, இங்குள்ள பெற்றோர் கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் கள். இந்நிலையில் கிழக்கில் இருந்து 1,000 போராளிகளை வடக்குக்கு அனுப்பும் படி கோரப்பட்டு உள்ளது.

2. இதுவரை நடந்த போராட்டத்தில் 4,550 மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் போராளிகள் களத்தில் வீரச்சாவடைந்துள்ளார்கள். இவர்க ளில் கிட்டத்தட்ட 2,248 வீரர்கள் பிரபாகரனின் கட்டளையை ஏற்று வந்து யாழ், வன்னி மண்ணில் வீரச் சாவடைந்துள்ளனர். மட்டக்களப்பு, அம்பாறை மக்கள் தங்கள் இளைஞர், யுவதிகளை புலிகளுக்கு அனுப்பியது தங்கள் மாவட்டத்தைப் பாதுகாக்கவும் அதனை அபிவிருத்தி அடையச் செய் வார்கள் என்ற நோக்கத்திலும் தான். ஆனால் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்கள் பாதுகாக்கப்படவில் லை, அபிவிருத்தி அடையவில்லை. வறுமையில் உள்ளது.

3. வடக்கில் உள்ள போராளிகள் சமாதானத்தைப் பயன்படுத்தி தங்க ளை மேம்படுத்தி உள்ளனர். வெளி நாடுகளுக்கு உல்லாசப் பயணமும் சென்று வருகின்றனர். ஆனால் மட்டக் களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 600 போராளிகள் வடக்கில் உள்ள முன்னிலை அரண்களைப் பாதுகாக்க பங்கருக்குள் இருந்து புளுங்குகின்றனர்.

4. 30க்கு மேற்பட்ட தமிழீழத்துறைப் பொறுப்பாளர்கள் இதுவரையில் பிரபாகரனால் நியமிக்கப்பட்டுள்ளார் கள். இவர்களில் எவருமே மட்டக்க ளப்பு, அம்பாறையைச் சேர்ந்தவர்கள் கிடையாது.

5. வேதனையான விடயம் இவ்வ ளவு தமிழீழ நிர்வாகத்துறைப் பொறுப்பாளர்களும் கிளிநொச்சி நகரில் சொகுசு வாகனங்களில் உலா வரும் போது 400இற்கும் மேற்பட்ட மட்டக்களப்பு, அம்பாறையை சேர்ந்த ஜெயந்தன் படைப் போராளிகள் பளை காவலரண்களிலேயே சென்றி பார்க்கிறார்கள் இது எந்த வகையில் நீதியாகும்?

6. வெளிமாவட்டத் தமிழீழத்துறைப் பொறுப்பாளர்கள் இங்கு வேலை செய்வதால் இங்கு பல சிக்கல்கள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அவர்களால் எங்கள் மக்களின் உணர்வுகளையோ, போராளிகளின் உணர்வுகளையோ, புரிந்துகொள்ள முடியாது. இதைவிட பெரிய விடயம் நிலப்பிரதேசம் பற்றிய அறிவாகும். இதுவும் தமிழீழத்துறைப் பொறுப் பாளர்களுக்கு அறவே தெரியாது. இவ்வாறு இருக்கும்போது இவர் களால் எவ்வாறு இங்கு நிர்வாகம் செய்யமுடியும்?

7. பொட்டு அம்மானின் புலனாய்வுப் பிரிவால் தூண்டப்பட்டு வடக்குத் தலைமை யுத்தத்துக்குத் தயாரா கிறது. வாகனங்களைக் கடத்துவது, போட்டி அரசியல் வாதிகளைக் கொலை செய்வது போன்ற செயற்பா டுகளில் இறங்கி உள்ளது. இது பற்றி தலைமையிடம் முறையிட்ட போதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

www.tamilarangam.net



# புலிகளின் நெருக்கடி நிலை காலக் குறிப்பு

கிழக்கு மாகாணத்தில் புலிகள் ஏனைய அரசியற் கட்சிகளையும் தேர்தலுக்கு சுதந்திரமாக இயங்க விடுவார்கள் என கருணா அறிவித்தார். (BBC)

01 - 03 - 04
இரு யூ.என்.பி வேட்பாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பொட்டம்மானின் புலனாய்வுப் பிரிவு இதனை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்பட்டது. மேலும் சில தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றது. (AFP)

02 - 03 - 04
தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக கருணா தன் அதிருப்தியை தன்னைச் சார்ந்தவர்களுக்கு வெளிப்படுத்தினார். (BBC)

"இந்த சமாதானச் சூழலில் தென் தமிழீழ மக்களுக்கு எனது கடமையைச் செய்யப் போகிறேன். எனது இலட்சியம் இந்த மக்களுக்காகப் போராடி அவர்களது காலடியில் மரணிக்க வேண்டும் என்பதே. அதில் யாரும் தலையிடுவதை நான் விரும்பவில்லை. நான் நேரடியாகக் கடவுளாக வணங்கும் உங்கள் தலைமையின் கீழ் இயங்க விரும்புகிறேன்." (கருணா, பிரபாகரனுக்கு மார்ச் 2 திகதியிட்டு எழுதிய கடிதம்.)

03 - 03 - 04
தன்னுடன் தனியான சமாதான உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுமாறு கருணா நோர்வே சமாதானக் குழுவைக் கேட்டார். (AFP)

வடக்கில் உள்ள தனக்கு ஆதரவான போராளிகளை மட்டக்களப்பிற்கு கொண்டுவர அரச படைகளின் உதவியை கருணா கோரினார். (AFP)

தாங்கள் பிரபாகரனின் நேரடித் தலைமையில் இயங்குவதாக கருணாவின் பேச்சாளர் குறிப்பிட்டார். (AFP)

04 - 03 - 04
பிரபாகரன் மட்டக்களப்பில் எழுந்துள்ள பிரச்சினை பற்றி ஆலோசனை நடத்தினார். (AFP)

மட்டக்களப்பில் எழுந்துள்ள பிரச்சினை ஒரு தற்காலிகப் பிரச்சினை அதற்கு விரைவில் ஒரு தீர்வு காணப்படும் என சுப.தமிழ்ச் செல்வன் நோர்வே தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

கிழங்கிலங்கைப் பல்கலைக்கழகம் கருணா - பிரபாவிற்கு இடையே சமரசம் செய்ய முற்பட்டது.

தாங்கள் விடுதலைப் புலிகளில் இருந்து பிரிந்து தனியாக இயங்க விரும்பவில்லை என கருணா தரப்பினர் தெரிவித்தனர். (தமிழ் அலை)

மட்டக்களப்புப் போராளிகள் பாரபட்சமாக நடத்தப்பட்னர் என்ற குற்றச்சாட்டுப் பட்டியல் மட்டக்களப்பில் விநியோகிக்கப் பட்டது. (பக் 3ல்)

05 - 03 - 04
தாங்கள் இனிமேல் வே பிரபாகரனின் கட்டளைகளுக்கு கட்டுப்படமாட்டோம் என கருணா அறிவித்தார். (AFP)

"பிரபாகரனை எதிர்த்து சவால் விட்ட தளபதிகள் யாரும் அந்தக் கதையைச் சொல்வதற்கு உயிருடன் இல்லை." பிரான்ஸிஸ் கரிசன். (BBC)

கிழக்கிற்கு சுயாதீன நிர்வாக அலகு கோரினார் கருணா. (AP)

கருணாவுடன் தனியான ஒப்பந்தம் செய்து கொள்ள அரசு மறுத்தது.

06 - 03 - 04
கருணாவை துரோகி என முத்திரை குத்தி புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேற்றினர். மட்டக்களப்பில் உள்ள சர்ச்சை கருணா என்ற தனிநபரின் செயல். அவரின் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்றும் புலிகள் தெரிவித்தனர். புதிய நியமனங்கள்: சிறப்புக் கொமாண்டர் ரமேஸ் உதவிக் கொமாண்டர் ராம் அரசியற் தலைவர் கௌசல்யன் (புலிகளின் செய்தியாளர் மாநாடு)

07 - 03 - 04
புலிகள் தன்னைக் கொல்ல படையனிகளை அனுப்பியதாகவும் அதனை முறியடிக்கத் தாம் தயார் நிலையில் இருப்பதாகவும் கருணா அறிவித்தார். (AFP)

கருணாவின் போராளிகள் தொப்பிகல காடுகளுக்குள் பின் வாங்கினர். மட்டக்களப்பில் புலிகளின் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதம் அடைந்தது. (AFP)

நான் இயக்கத்தை விட்டு வெளியேறிய பின் என்னை வெளியேற்றுவது வேடிக்கையானது என கருணா தெரிவித்தார். (AFP)

திருக்கோயில், வாழைச்சேனைப் பகுதிகளில் கருணாவுக்கு ஆதரவாக ஊர்வலம் நடைபெற்றது. புலித் தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டது. (Tamil Net)

08 - 03 - 04
மட்டக்களப்பில் உள்ள கல்வி, மத மற்றும் பொதுஸ்தாபனங்களின் குழு வன்னிக்கு பயணமாகிறது. (உதயன்)

இலண்டன் மட்டக்களப்பு பிராந்திய மக்கள் கருணாவுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க தயாராகின்றனர்.

www.tamilarangam.net





சண் ராசையா
அரசியல் ஆய்வாளர்

**யாழ் மேலாதிக்கம் என்பது வெறுமனே அமுங்கி இருந்ததே தவிர அதன் ஆணி வேர்கள் அறுந்து விடவில்லை. அதன் வேர்கள் நறுக்கப்பட வேண்டும். உடைத்தெறியப்பட வேண்டும்.**

# யாழ் மேலாதிக்க வாதமும் கருணாவின் நிலைப்பாடும்

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண இராணுவப் பொறுப்பில் இருந்த கருணா புலிகள் அமைப்பில் இருந்து விலகியுள்ளார். இரு நாட்களின் பின் புலிகளால் விலக்கப்பட்டுள்ளார். ஒரு அமைப்பில் இணைவதும் விலகுவதும் கருத்துச் சொல்வதும் கூட ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள் தான். இன்றைய சூழலில் இது சரியா என்பதே இந்த ஆக்கத்தின் நோக்கம்.

பிரதேச வாதத்தின் அடிப்படை அலகாக யாழ் மேலாதிக்க வாதம் இருப்பது நான் விளக்க வேண்டிய ஒன்றல்ல. விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பல்வேறு அமைப்புகள் பிரதேச வாதம் தொடர்பாக பன்முக செயற்பாடுகளில் இறங்கி இருந்தாலும் கூட யாழ் மேலாதிக்கம் என்பது வெறுமனே அமுங்கி இருந்ததே தவிர அதன் ஆணி வேர்கள் அறுந்து விடவில்லை. வன்னியிலும் கிழக்கிலும் யாழ் மேலாதிக் கத்தின் அச்சம் இன்னும் உள்ளது. புலம்பெயர் சூழலில் யாழ் கறிப்பவுடர், யாழ் உணவகம், யாழ்முரி விருது, யாழ்ப்பாண செய்திகள் (ஈழமுரசில் இப்போது இல்லை) என்று யாழ் என்று வேர் வைத்து வியாபாரம் பண்ணும் அளவுக்கு அதன் ஆணிவேர் ஆழப்பதிந்து இருக்கின்றது.

ஒருமுறை அன்ரன் பாலசிங்கத்துடன் ரூட்டிங்கில் உள்ள ஒரு உணவகத்தில் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்த போது அவர் கூறினார் "யாழ்ப்பாணத்திலும் வந்து கடை போடலாமே" என்று. இது யாழ் மேலாதிக்க சிந்தனையின் வெளிப்பாடுகள்.

இதன் அடிப்படையில் தான் கருணா தனது வாதத்தையும் வைத்திருக்கிறார். ஒரு அமைப்பு ஜனநாயக நடைமுறையில் செயற்படாத போது அதன் நடவடிக்கை களை கேள்வி கேட்பது ஒன்றும் சமூக விரோதச் செயல் அல்ல. ஆனால் கருணாவின் செயற்பாடுகள் அனைத்தும் ஒட்டு மொத்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பணயம் வைத்து தன் நியாயத்தை கற்பிக்கப் புறப்பட்டது முற்றிலும் ஒரு தவறான செயல்.

மட்டக்களப்பு போராளிகள் மட்டக்களப்பில் மட்டும் தான் போராட வேண்டும் என்பது பச்சை பிரதேசவாதம். வடக்கு மாகாணம் கைப்பற்றப்படும் வேளையில் கிழக்கு மாகாணத்தில் நாம் போராடமாட்டோம் என்று ஒரு யாழ் நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட போராளி கூறப்போவ தில்லை. இங்கு எண்ணிக்கையை வைத்து ஒப்பிப்பது முற்றிலும் இறந்த போராளிகளை அவமதிக்கும் செயல்.

கருணாவின் ஏனைய குற்றச்சாட்டுக்கள் சரியாகக் கூட இருக்கலாம். இன்றைய சூழலில் சர்வதேசமே எமது போராட்டத்தை அங்கீகரிக்கும் அளவுக்கு நெருங்கி வந்து கொண்டிருக்கும் போது இவர் செய்த செயலானது இந்தியாவின் நீண்டகால எதிர்பார்ப்புக்கு வழங்கிய தீனியே தவிர வேறில்லை.

எமது போராட்டம் இன்று அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு பாரிய மாற்றத்தை நோக்கி நகரும் இவ்வேளையில் தானும் ஒரு பிரதிநிதி என்று கூறிக் கொண்டு வந்திருக்கும் கருணாவுக்கு தமிழ்பேசும் மக்க ளின் எதிர்காலத்தைவிட தனது தனிப்பட்ட எதிர் காலம் முக்கியமாகப்பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரியது.

தமிழ் மக்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடு என்ன? விடுதலைப் புலிகளின் தலைமையைப் பலவீனப்படுத்தும் எந்தச் செயலும் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமே தவிர வேறொன்றுமில்லை. தமிழ் மக்கள் மீண்டும் ஒரு ஆணையை சர்வதேசத்துக்குக் காட்ட வேண்டிய தேர்தல் சூழலில் இந்தியப் பிசாசுகளுக்கு பச்சைக் கொடி காட்டிய செயல் ஆனது தூர நோக்கு சிந்தனை அற்ற செயலே.

யாழ் மேலாதிக்க வாதம் உடைத்தெறியப்பட வேண்டும். அதன் வேர்கள் நறுக்கப்பட வேண்டும். மட்டக்களப்பான் பாயில் ஒட்ட வைப்பான், வன்னியின் படிப்பறிவில்லாத மாடு என்ற அநாகரீக சிந்தனை துடைத் தெறியப்பட வேண்டும். மலருகிற தமிழீழம் சகல பகுதி மக்களையும் சரிசமமாகப் பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும். ஆனால் குட்டையை கிளறும் நேரம் இதுவல்ல. இதற்கான போராட்டம் தொடர்ச்சியானது. கருத்தியல் தொடர்பானது. கருணா தன் வரலாற்றுத் தவறைத் திருத்திக் கொண்டு செயல்பட முன்வந்தால் நாம் அனை வரும் அவரை வரவேற்கத் தயாராக இருக்க வேண்டும்.❑

www.tamilarangam.net



உள்ளே :

உண்மையும் மீள் உறவும் 01
சந்திரிகா எதிரியுமல்ல ரணில் நண்பனுமல்ல 02
இனவாதத்தின் இடத்திற்கு மதவாதம் தெரிவு 03
தமிழ் பேசும் மக்கள் : அடையாள இருட்டடிப்பு 04
தேர்தல் திருவிழா அரோகரா 06
ஏகபிரதிநிதித்துவம் 09
ஃபிடல் கஸ்ரோ நேர்முகம் 10
சிரிப்பு சிந்திப்பு 12
வம்பவாரிசு ஜெயராஜ் : ஆருக்கு வைக்கிறார் ஆப்பு 13
நாடகம் 16
ஈழவர் திரைவிருந்து 18
பருவமடைவது எப்போது 20
சர்வதேச பெண்கள் தினம் 21
பிரான்சில் பெண்கள் பர்தா அணியத் தடை 22
அரசாங்கத்தரப்பிலும் புலிகள் தரப்பிலும் வில்லன்கள் 23
இலண்டன் இலக்கிய நிகழ்வுகள் 24

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# உண்மையும் மீள் உறவும்
# Truth & Reconciliation

தன்னைக் கடிக்கும் நுளம்பைக் கூட அடிக்கத் தெரியாத அந்த மழலை வதனனுக்கு சில மாதங்கள் கூட வாழும் உரிமையை தமிழ்மண் வழங்க வில்லை. அம்மா என்பதைத் தவிர எதனையும் சொல்லத் தெரியாத அந்தப் பிஞ்சு முகம் கூரிய ஆயுதத்தால் கொத்தப்பட்டு உள்ளது. வாழும் உரிமையை மறுக்கப்பட்டதை தட்டிக் கேட்க யாரும் முன்வரவில்லை. ஆனால் வதனனின் குருதி காயும் முன்னரே வாக்கு கேட்க கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன. சமாதானத்தை கொண்டுவரப் போவதாக கூறுகின்றனர்.

கடந்த 20 வருட உள்நாட்டுப் போரில் வதனன் உட்பட 65,000க்கும் மேற்பட்ட உயிர்கள் கொல்லப்படுவதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் காரணமாக இருந்தவர்கள் இன்று தேர்தல் களத்தில் குதித்து உள்ளனர். இந்த உயிர் கொலைகளுக்கு எந்தக் காரணத்தையும் தெரிவிக்காமல் அதற்கு மன்னிப்பும் கோராமல் இப்படியான நிகழ்வுகள் இனிமேல் ஏற்படாது என்ற உறுதியையும் வழங்காமல் மக்களிடம் வாக்கு கேட்டுப் புறப்பட்டு உள்ளனர்.

மக்களுக்கு வேண்டியது பேச்சளவிலான சமாதானமும் அமைதியும் அல்ல. உண்மையான சமாதானமும் அமைதியும். அதனை இந்தத் தேர்தல் கொண்டுவரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. வாழும் உரிமையே மறுக்கப்பட்டு உள்ள நிலையில் வாக்குரிமை பற்றிப் பேச முடியுமா? 2001 தேர்தலில் 4,300 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளது. 110 கொலைகளும் 200 கொலை முயற்சிகளும் நடந்து உள்ளது. யுத்த நிறுத்த காலத்தில் வடக்கு கிழக்கில் 50க்கும் மேற்பட்டவர்கள் அரசியல் படுகொலை செய்யப்பட்டு உள்ளனர்.

இத்தேர்தலில் முன்னின்று செயற்படும் அரசியற் கட்சியானாலென்ன ஆயுத அமைப்புகள் ஆனாலென்ன அனைவருமே இலங்கை மக்கள் இரத்தம் சிந்தவும், மோசமான படுகொலைகளுக்குள்ளாகவும் ஒரு வகையில் பொறுப்பா னவர்கள். இவர்கள் மக்கள் முன் வந்து தங்கள் தவறுகளைச் சொல்ல வேண்டும். அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். இனிமேல் அத்தவறுகள் இடம்பெறாது என்ற உறுதியை மக்களுக்கு வழங்க வேண்டும்.

இன்று இலங்கை மக்களுக்கு வேண்டியது தேர்தல் அல்ல Truth & Reconcilation (உண்மையும் மீள் உறவும்). ஜேவிபி தலைவர் சோமவன்ச அமரசிங்க கடந்த காலத்தில் தங்கள் அமைப்பால் ஏற்பட்ட இரத்தக் களரிக்கு பகிரங்க மன்னிப்புக் கோரி உள்ளார். ஏனைய சிங்கள, தமிழ் கட்சிகளும் போராளிக் குழுக்களும் தமது வரலாற்றுத் தவறுகளுக்காகவும் படுகொலை களுக்காகவும் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

தென் ஆபிரிக்காவில் அமைக்கப்பட்டது போன்ற Truth&Reconciliation Commission - TRC ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும். இவ்வமைப்பின் நோக்கம் யாரையும் தண்டிப்பதல்ல. இவ் ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிப்பவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்படலாம். ஆனால் அதன் முன்னிலையில் சகல தலைவர்களும் முக்கிய பங்கெடுத்தவர்களும் சாட்சியமளிக்க வேண்டும். தவறுகளை ஏற்றுக் கொள்ள முனவராமல் தொடர்ந்தும் தங்களை நியாயப்படுத்திக் கொண்டு இருப்பது எந்த வகையிலும் சமாதானத்தைக் கொண்டுவரப் போவதில்லை.

www.tamilarangam.net



# சந்திரிகா எதிரியுமல்ல ரணில் நண்பனுமல்ல

தேர்தலில் எந்தக் கட்சிக் கூட்டணியும் அறுதிப்பெரும்பான்மைப் பலத்தை எடுக்கப் போவதில்லை என்பதையே கருத்துக்கணிப்புகள் காட்டுகிறது. தற்போதுள்ள அரசியல் நெருக்கடி நிலைக்கு இத்தேர்தல் எந்தத் தீர்வையும் கொண்டுவரப் போவதில்லை. தேர்தலில் எக்கட்சி ஆட்சி அமைத்தாலும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 2006 நவம்பர் வரை ஜனாதிபதியாக இருக்கப் போகிறார். ஆகையால் பேச்சுவார்த்தைகளை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவது பற்றி விடுதலைப்புலிகளும் ஜனாதிபதி சந்திரிகாவுமே முடிவெடுக்க வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்க தமிழர்களுக்கு நண்பரும் இல்லை. சந்திரிகா எதிரியுமில்லை. தமிழ் மக்கள் மீதான பேரினவாத அடக்கு முறையை இரு தலைவர்களதும் கட்சிகள் ஊக்குவித்தே வந்தன. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலேயே தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட இனப்படுகொலைகளும் குடியேற்றங்களும் மேற்கொள்ளப் பட்டன. அண்மைக் காலம்வரை ஆயுதக் குழுவாக செயற்பட்டு வந்த ஜேவிபி இன்று சந்தர்ப்பவாத இனவாதம் பேசுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் சுதந்திரக்கட்சி ஆட்சியிலும் தமிழ் போராளிக்குழுக்களாலும் கொல்லப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களாக உள்ளது. ஆனால் ஜேவிபி ஜனநாயக நீரோட்டத்தில் இல்லாத ஆயுத அமைப்பாக இருந்த போதும் தமிழ் மக்களுக்கு எதிராக எந்த வன்முறையிலும் ஈடுபட்டு இருக்கவில்லை. தமிழ் மக்கள் யாரும் ஜேவிபியால் கொல்லப்படவில்லை. ஆனால் இன்று யூஎன்பி அரசுடன் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கும் தமிழ் கட்சிகள் ஜேவிப்பிக்கு எதிராக போர்க்கொடி தூக்குகின்றனர்.

விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜேவிபி கூட்டணியுடன் பேச்சுவார்த்தைக்கு செல்வது தவிர்க்க முடியாதது. இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணப்பட வேண்டுமென்றால் விடுதலைப் புலிகள் யாருடனும் பேசத் தயாராக வேண்டும். சிங்கள மக்களின் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் மட்டும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. ஆகையால் விடுதலைப் புலிகளும் தமிழ் கூட்டமைப்பும் சிங்கள பெரும்பான்மை அரசியல் கட்சிகளின் மோதலில் சிக்காமல் வெளியே நின்று தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான வழிவகைகளை ஆராய வேண்டும். சிங்களக் கட்சிகளின் மோதலில் நீண்டகாலம் குளிர்காய முடியாது.

ஜனாதிபதி சந்திரிகாவையும் ஜேவிபியையும் தொடர்ச்சியாக தாக்குவதும் ரணிலுடன் ஒரு மென்போக்கை கடைப்பிடிப்பதும் பொதுவான அம்சமாகக் காணப்படுகிறது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை சிங்களக் கட்சிகள் அனைத்துமே ஒரே தன்மை உடையனவே. சிங்கள மக்களின் பிரதிநிதிகள் யாருடனும் விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்கு வேண்டியது அரிசி அதனை ரணில் குத்தினாலென்ன சந்திரிகாவும் சோமவன்சவும் சேர்ந்து குத்தினாலென்ன. அல்லது எல்லோரும் சேர்ந்து குத்தினால் இன்னும் விரைவாக அரிசி கிடைக்கும். எல்லோரும் சேர்ந்து தமிழர்களைக் குத்தாமல் பாரத்துக் கொள்வது தமிழ் பிரதிநிதிகளின் பொறுப்பு.

**கட்டுரையாளர்களுக்கு அன்பான வேண்டுகோள்**

தேசம் சஞ்சிகை வெவ்வேறு தளங்களில் இருந்தும் ஆக்கங்களை எதிர்பார்க்கிறது. ஆனால் கட்டுரையாளர்கள் தங்கள் சொந்தப் பெயர்களிலேயே ஆக்கங்களை எழுதி வழங்க வேண்டும். கட்டுரையுடன் புகைப்படம் ஒன்றையும் இணைத்து அனுப்ப மறவாதீர்கள்.

வடிவமைப்பு, தெளிவுபடுத்தல் நோக்கங்களுக்காக, கருத்தில் மாற்றம் செய்யாமல் சில மாற்றங்களை தேசம் ஆசிரியர் குழுவினர் மேற்கொள்வார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

ஆக்கங்கள் விஞ்ஞானபூர்வமாகவும் ஆதாரங்களுடனும் அமைவது மிகவும் அவசியமானது. தகுந்த காரணங்களின்றி இணைய ஊடகத்திலோ அச்சு ஊடகத்திலோ வெளியான ஆக்கங்கள் மீள்பிரசுரம் செய்யப்படமாட்டாது.

உங்கள் ஆக்கங்கள் 750 சொற்களுக்கு மேற்படாமல் (தேசம் சஞ்சிகையில் 2 பக்கங்களுக்கு உட்பட்டதாக) அமைதல் வேண்டும். ஆக்கங்கள் கணனிப்படுத்தப்பட்டு மின் அஞ்சல வாயிலாக அனுப்பப்படுவதை வரவேற்கிறோம். கையெழுத்துப் பிரதிகளை அனுப்புபவர்கள் தயவு செய்து தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

தேசம்
வளர்ந்து வரும் ஓர் சஞ்சிகை.
உங்கள் ஒத்துழைப்பு
இன்றியமையாதது.

www.tamilarangam.net



# இனவாதத்தில் இடத்திற்கு மதவாதம் தெரிவு

தமிழரசன் (பெர்லின்)
சமூகவியல் ஆய்வாளர்

ஐரோப்பாவிலே பிரெஞ்சுப் புரட்சி அரசில் இருந்து மதத்தை வெளியேற்றியது. மதத்திற்கு எதிரான போராட்டம் பழைய வாழ்விலிருந்து மக்களை விடுவித்து ஜனநாயக அரசியல் வாழ்விற்கு அழைத்தது. முதலாளித்துவ ஜனநாயகம் வளர வேண்டுமென்றால் மதத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரப் பண்பாட்டிலிருந்து வெளியேற வேண்டும். மதமானது தனி மனிதர்களின் விருப்பு வெறுப்புச் சார்ந்த பிரச்சினையாக்கப்படல் வேண்டும். சோசலிச அரசுகள் மதத்தை அரசிலிருந்து வெளியேற்றியதுடன் மதவாதத்தின் செல்வாக்கை சமூகத்திலிருந்து துரத்தின. இந்த பெப்ரவரி மாதம் பிரான்சின் பொது இடங்களிலிருந்து சகல மத அடையாளங்களும் கடவுளர் தொடர்பான விடயங்களும் அகற்றப்படுவதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையானது உலகிலேயே பௌத்தம், இந்துமத வளர்ச்சிக்கான தனித்தனி அமைச்சுக்களைக் கொண்டுள்ளது. இங்கு மதமும் அரசும் இரட்டைக் குழந்தைகளாக செயற்படுகின்றன. பௌத்த பிக்குகள் அரசியலை வழிநடத்துகின்றார்கள். இப்போது அரசு - புலிகளிடையேயான பேச்சுவார்த்தை அதிகாரத்தை பங்கிடுவதற்கான பேரம் பேசல்களூடாக தமிழ் - சிங்கள இனவாதப் போக்குகள் தரைதட்டியுள்ளன. இதற்கு மாற்றாக பௌத்தமும் இந்துமதப் போக்குகளும் இணைந்த கிறிஸ்தவ - இஸ்லாமிய மத எதிர்ப்புகள் சிருஷ்டிக்கப்படுகின்றன.

கடந்த ஒரு சில மாதங்களுக்குள் தென்னிலங்கையில் பௌத்த தீவிரவாதிகள் என்று கருதப்படுபவர்களால் 107 கிறிஸ்தவமத வழிபாட்டிடங்கள் தாக்கப்பட்டுள்ளன. அதேசமயம், விடுதலைப்புலிகள் முஸ்லிம் மக்கள் மேல் படுகொலைகளை நடத்திக்கொண்டிருக்கும் வேளை, விடுதலைப் புலிகளின் பினாமிப் பேச்சாளரும் UNP அரசின் இந்து கலாச்சார அமைச்சராக இருக்கும் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் "மதமாற்றத் தடைச் சட்டம் தேவை" என்று பேசி வருகின்றார். இது ஜெகோவா உட்பட பலவித கிறிஸ்தவம் சார்ந்த மத உதவி நிறுவனங்களுக்கு எதிராகச் சொல்லப்பட்டாலும் முழுக் கிறிஸ்தவப் போக்கிற்கும் எதிரானதாக இவை வளர்ச்சிபெறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தியாவிலும் முஸ்லிம் கிறிஸ்தவ மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் இந்துமத வெறியர்களான பாரதீய ஜனதா கட்சி அரசால் நடாத்தப்படுவதையும் இணைத்துப் பார்ப்பதன்மூலம் சில தெளிவுகளை எட்டமுடியும்.

இலங்கையில் வடக்கு கிழக்குக்கு வெளியே மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட புதிய இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொழும்பு நகர் சார்ந்த பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட புதிய ஆலயங்கள் எழுந்துள்ளன. சுமார் 4 இலட்சம் தமிழ் மக்களும் 75,000 முஸ்லிம் மக்களும் தம் சொந்த வாழ்விடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் வேளையில் புதிய கோவில்களை அமைப்பதிலும், போரினால் சேதமடைந்த கோவில்களைப் புனரமைப்பதிலும் அக்கறை காட்டப்படுகின்றது. ஆனால், மனிதர்கள் வாழத்தக்கதான சிறு தொழிற்சாலைகள், சுயதொழில்முயற்சிகள், கூட்டுப்பண்ணைத் திட்டங்கள், போன்றவற்றில் முதலிட எவரும் தயாராக இல்லை.

இந்தியாவில் கோடிக்கணக்கான ஏழை இந்தியர் அடிப்படை வசதிகளற்று அல்லலுறும் வேளையில் இந்துமத வெறியர்கள் இராமருக்குக் கோவில் கட்டுவதில் தான் அக்கறைப்படுகிறார்கள். மக்களின் சமூக நெருக்கடிகள் தீவிரமடையும் போது மக்களை மதவெறியினுள் தள்ள முயற்சிப்பது தந்திரமாகின்றது. 1960களில் இலங்கையில் வேலை நிறுத்தங்களும் சமூகப் புரட்சிக்கான நிலைமைகளும் உருவாகிய சமயத்தில் தான் மதத்தைப் பள்ளிகளில் கட்டாயபாடமாக்கினார்கள். பின்னர் பௌத்தத்தை அரச மதமாக்கினார்கள்.

கடந்த டிசம்பர் மாதம் ஐரோப்பிய Vectone தொலைக்காட்சியில் உரையாற்றிய மகேஸ்வரன் பா.உ., இந்துமத அமைப்புக்களின் கோரிக்கைக்கு இணங்க மத மாற்றத் தடைச்சட்டம் கொண்டவரப்பட உள்ளதாகவும் இந்து சமயத்திலிருந்து மதம்மாறும் முயற்சிகள் கட்டுப் படுத்த வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார். இந்திய பாரதீய ஜனதா அரசு தனக்கு முழு ஆதரவு தெரிவிப்பதாகவும் தனது சட்டம் தமிழ்நாட்டில் ஜெயலலிதா அரசு கொண்டுவரும் மதமாற்றத் தடைச்சட்டத்தை ஒத்ததாக அமையும் என்றும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார். இந்துமத வெறியர்களின் ஞானத்தந்தையான சங்கராச்சாரியாரையும் சந்தித்து ஆசிபெற்றதையும் நினைவுகூர்ந்தார்.

www.tamilarangam.net



முஹம்மது எஸ்.ஆர்.நிஸ்த்தார்
சமூகவியல் ஆய்வாளர்

## தமிழ் பேசும் மக்கள்

# அடையாள இருட்டடிப்பு

1948ல் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நீறுபூத்த நெருப்பாய் இருந்து வந்த இன அடக்குமுறையும் அதற்கெதிரான போராட்டமும் 1983இல் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இரண்டு தசாப்தங்கள் தாண்டி இன்று இந்த இனப்பிரச்சினைத் தீ அணைந்து போகப் பலரும் பல வழிகளிலும் முன்னின்றுழைப்பது மகிழ்ச்சி தருவதாய் இருந்தாலும் இனப்பிரச்சினையின் உச்சகட்ட காலங்களில் ஆங்காங்கே முளைவிட்ட ஒரு கேள்வி இப்போது மரமாகிக் கிளை பரப்பியுள்ளது. இது பெரு விருட்சமாகி புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்காமல் இருக்க தேவைக்கேற்ப அழகாய், அளவாய் கத்தரித்து பராமரித்து வளர்க்கப்பட வேண்டுமா என்ற கேள்வியும் மிகத் தெளிவான குரலில் ஓங்கி ஒலிக்கின்றது.

பல்லின மக்களைக்கொண்ட இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள இனத்தின் சார்பில் இலங்கை அரசும் (ஜனாதிபதி நீங்கலாக) தமிழினத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும் (வேறு யாரும் சேர்க்கப்படாமல்) பிரதிநிதிகளாகச் செயற்படுவதால் இலங்கையில் இரண்டு இனங்கள் மட்டும் தான் உள்ளன என்பதோ அல்லது வேறு இனங்களுக்கு அரசியலை அடியொட்டியதான பிரச்சினைகள் இல்லை என்பதோ பொருளல்ல. தவிர, போரிட்ட இரண்டு இனங்களும் ஏதோ வொரு தீர்வை அடைந்தால் அது எல்லா இனங்களையும் திருப்திப்படுத்தும் என்ற உத்தரவாதமுமாகாது. ஏனெனில் இலங்கையின் இன்னுமொரு சிறுபான்மையினம் தொடர்பான அதன் அடையாளப் பிரச்சினையில் சில சிக்கல்கள் இருப்பதால் இனப்பிரச்சினை தொடர்பாக அதன் பங்களிப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது.

"இலங்கை முஸ்லிம்கள்" என்போரே இந்தப் புதிய பிரச்சினையின் கருப்பொருளாகும். 1990இல் நடந்த இரண்டு முக்கிய வரலாற்றுச் சம்பவங்கள் இந்தப் புதிய பிரச்சினைக்கான தீர்வொன்றின் தேவையை உணர்த்தி யது. இதில் 1வது, கிழக்கிலங்கையில் தொழுகை நேரத்தின்போது வயதுபேதமின்றி சிறியோர் முதல் தள்ளாடும் வயதினர்வரை நூற்றுக்குமேற்பட்டோர் மசூதிக்குள் வைத்து புலிகளால் ஒரே நேரத்தில் காரணமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம். 2வது அதே ஆண்டில் யாழ், மன்னார், முல்லைத்தீவு ஆகிய தமிழ்

---

> சென்னைப் பத்திரிகையாளர்களிடம் பேசிய யாழ் எம் பி மகேஸ்வரன் ஏராளமான இந்துக் குடும்பங்கள் மதமாற்றம் செய்யப்பட்டதாய் ஆதாரமற்ற பொய்களைச் சொன்னார். இத்தகைய மதவாதப் போக்கிற்கான அரசியற் காரணங்களை அவதானிப்பது அவசியம். இந்திய ஆதரவைப் பெறவும் எதிர்காலத்தில் புலிகள் தமிழ் பகுதிகளில் இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களுக்கு மேலான ஒடுக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்குமான முன்னறிவித்தலே இவை. அத்துடன் இந்திய இந்துப் போக்குகள் இலங்கைப் பரப்பிலும் பரவுவதன் எதிரொலியுமாகும்.

அடிப்படையில் இலங்கையின் சைவசமயப் போக்குகள் தமிழகத்தைப் போன்று பிராமணீயம், சம்ஸ்கிருத மேலாதிக்கம் இவற்றோடு தொடர்பற்றதாகும். நாயன்மார் பாடல்கள், தேவார திருவாசகங்களின் திசையில் மக்கள் மயப்பட்டதாகும். இலங்கை தமிழ் மயப்பட்ட பிள்ளையார், முருகன், கண்ணகை அம்மன், வைரவர், சிவன், ஆகியோரை வணங்குதலை உடையதாகும். அண்மைக் காலங்களில் ஆஞ்சநேயர், ஐயப்பன், கிருஷ்ணர், சாயிபாபா வழிபாடுகளின் பெருக்கம் அதிகரித்தமை இந்திய இந்துமதச் செல்வாக்கினது விளைவு எனக்கொள்ளலாம்.

எனினும் இலங்கையில் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாமிய மதங்கள் போன்று இந்து மதம் மக்களுடன் இறுக்கமான நிறுவனமயப்பட்ட முறையில் இயங்க வலுவற்ற சமயப்போக்காகவேயிருந்தது. மக்களின் சமூகக் கொதி நிலைகளைப் பிரதிபலிக்க முடியாத யாழ். உயர்குல வேளாளக் குடிகளின் கௌரவ மதமாக இருந்தது. தமிழ்மக்களின் தேசிய எழுச்சிக்கு கிறிஸ்தவ மதம் அரசியல் மற்றும் சமூக ரீதியில் பங்காற்றிய போது இலங்கையில் இந்து மதமானது மொக்கான பழம் பண்டமாக சமூக இசைவியக்கத்தை பிரதிபலிக்க முடியாமலேயே இருந்தது.

இதன் மிகுதி அடுத்த இதழில்.❑

www.tamilarangam.net



- முஸ்லீம் பூர்வீக பகுதிகளிலிருந்து பலாத்காரமாக ஒரு சில மணிநேரத்தில் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டமை.

மேற்படி இரண்டு சம்பவங்களில் இருந்தும் எழும்பிய புதிய கேள்விகள் இக்கட்டுரையின் அடிப்படைப் பிரச்சினையாகிய "சிறுபான்மையினம்" என்ற பதப்பிரயோகத்தின் சரியான விளக்கமொன்றின் தேவையை உணர்த்தி நிற்கின்றது.

இந்த "முஸ்லிம்களை" விடுதலைப்புலிகள் "தமிழ் பேசும் மக்கள்" என்ற பதப்பிரயோகத்தின் கீழ் அடக்கித் தாம் இனப்பிரச்சினை விவகாரத்தில் "தமிழ் பேசுவோரின்" பிரதிநிதிகள் என்றும், தமிழர்களுக்கும் சிங்களவருக்கும் இடையில் ஏற்படும் தீர்வும் உடன்பாடும் "தமிழ் பேசுவோர் எல்லோருக்குமான தீர்வே" என்ற நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர். புலிகளின் இந்த நிலைப்பாட்டிற்கு வலிமை சேர்ப்பது போல் இலண்டனில் மையம் கொண்டுள்ள தமிழ் வானொலிகளும் பத்திரிகைகளும் இலங்கை முஸ்லீம்கள் தொடர்பாக எந்தவித விளக்கமுமின்றி "இஸ்லாமியத் தமிழர்" என்றும் "தமிழ் பேசும் முஸ்லீம்கள்" என்றும் இந்த இனத்தை அடையாளப்படுத்துகின்றனர்.

ஒரு இனம் தொடர்பான மேற்படி அனைத்து பதப்பிரயோகங்களும் அரசியல்ரீதியில் தெளிவை ஏற்படுத்தாதது மாத்திரமின்றி பிற்காலத்தில் புதிய பல பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் கூடியதாகவே உள்ளன.

விடுதலைப்புலிகளின் "தமிழ் பேசும் மக்கள்" என்ற பதம் இனபேதமின்றி தமிழ் பேசும் மக்கள் எல்லோரினதும் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாக அமைந்திருக்க வேண்டும். அப்படியானால் 1990இல் நடந்த துயரச் சம்பவங்களும் இதுபோன்ற சிறிய அளவிலான குரங்கு பாஞ்சான், ஏறாவூர், மூதூர் போன்ற இடங்களில் இன்னும் தொடர்ந்துகொண்டிருக்கும், இனித் தொடரப் போகும் சம்பவங்களுக்கும் வி.புலிகளின் சார்பில் சராசரி மனிதர்தானும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்கள், நியாயங்கள், உத்தரவாதங்கள் எதுவுமே இல்லை.

எனவே "தமிழ்பேசுவோர்" என்ற சொற்பிரயோகம் நடைமுறையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பது மிகத்தெளிவு. மேலும் "தமிழ் பேசுவோரின்" பிரதிநிதிகள் தான் புலிகள் என்றால் இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) உடனான ஒப்பந்தம் ஏன் செய்யப்பட்டது? அது எதுகுறித்துச் செய்யப்பட்டது என்ற கேள்விகளுக்கப்பால் அப்படியொரு உடன்படிக்கை தேவையும் இல்லாதது. (ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தெளிவாகப் பகிரங்கப் படுத்தப்படவில்லை). ஆகவே தமிழரும் முஸ்லீம்களும் அரசியல்ரீதியிலும் வேறுபட்டவர்கள் என்பது மிகத்தெளிவு.

மறுபுறத்தில் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் கூறும் "இஸ்லாமியத் தமிழர்", தமிழ் பேசும் முஸ்லீம்கள், என்ற பதப் பிரயோகங்களும், மயக்கம்தரும் பண்பு களையே கொண்டுள்ளன. ஏனெனில் தமிழ் இனத்தில் உள்ளவர்கள் "சைவத் தமிழர்" என்றோ, "கிறிஸ்தவத் தமிழர்" என்றோ மதரீதியில் அடையாளம் காணப்படுவது இல்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சைவர்களும் கிறீஸ்தவர்களும் (அதன் உட்பிரிவினரும்) இனரீதியில் தமிழரென்றே கொள்ளப்படுகின்றனர். தமிழ் பேசும் சைவர், தமிழ் பேசும் கிறிஸ்தவர் என்று யாரும் அழைக்கப்படாத நேரத்தில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் என்று மாத்திரம் வரையறைக்குட்படுத்தப்பட்டு உள்ளதைக் காணலாம். இதிலிருந்து தமிழ்பேசும் முஸ்லீம்கள் என்போர் இனத்தால் தமிழர் அல்லர் என்பதோடு மாத்திரம் அல்லாமல் சிங்களம் பேசும் முஸ்லீம்கள் என்போரின் இருப்பையும் உறுதி செய்கின்றது. இது ஒருவகையில் சிங்களம் பேசும் கிறிஸ்தவரின் நிலைபோன்றது.

சிங்களம் பேசும் கிறிஸ்தவரை தமிழ் இனம் உள்வாங்க முடியாது. காரணம் அவர்கள் இனத்தால் சிங்களவர். அதேபோல் தமிழ்க் கிறிஸ்தவர் மதத்தால் சிங்களவர் போன்று கிறிஸ்தவராயினும் இனத்தால் தமிழராகவே இருக்கின்றனர். (இது பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது போல் காணப்பட் டாலும் இது முழுக்க முழுக்க சாரும் இனத்தை அடிப்படையாகக் கொண்டது.) எனவே இங்கு சிங்களம் பேசும் முஸ்லீமை எவ்வாறு சிங்களவர் எனக் கருதக் கூடாதோ, கருத முடியாதோ, அதே போல் தமிழைப் பேசுவதால் மட்டும் தமிழ் பேசும் முஸ்லீம்களை தமிழர் என்று வரையறுத்துவிட முடியாது.

இந்த இடத்தில் கவனிக்கப்படவேண்டிய இன்னு மொரு விடயம், புதிதாகச் சமயம் மாறுவோர், சமயம் மாறி முஸ்லிமாகவரும் தமிழரும், சிங்களவரும் சமயத்தால் முஸ்லீம் என்பவரே தவிர அவர் இனத்தால் இன்னும் தமிழரும் சிங்களவருமே.


ஒரு காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் பௌத்தம் செழிப்புற்றிருந்ததை வரலாறு கூறுகின்றது. அப்போது பௌத்தத்தைப் பின்பற்றிய தமிழர் சமயத்தால் பௌத்தர் என்று இனங் காணப்பட்டதால், அவர்களின் இனம் சிங்களம் என்றாகி விடவில்லை. அவர் அன்றும் இன்றும் என்றும் தமிழரே. அதேபோல் சமயத்தால் முஸ்லிமாக இருக்குமொருவர் சைவராகவோ கிறிஸ்தவராகவோ பௌத்தராகவோ சமயத்தை மாற்றிக்கொண்டாரென்றால் அவர் சைவர், கிறிஸ்தவர் அல்லது பௌத்தரே தவிர அவரின் இனஅடையாளம் தமிழர் என்றோ அல்லது சிங்களவரென்றோ மாறிவிடப்போவதில்லை. அப்படியானால் இங்கு எழும் நியாயமான கேள்வி இந்த இலங்கை முஸ்லீம் என்போர் இனரீதியில் யார் என்பதே.

இதற்கான பதில் அடுத்த இதழில்.❑

www.tamilarangam.net



# தேர்தல் திருவிழா அரோகரா !!!





தொகுப்பு :
த ஜெயபாலன்
எஸ் பாலச்சந்திரன்
ரி கொன்ஸ்ரன்ரைன்

தேர்தல் திருவிழா களை கட்ட ஆரம்பித்துவிட்டது. மக்கள் மீட்பர்கள்(?) வழக்கம்போல் வண்ணக் கோஷங்களுடன் வலம் வர ஆரம்பித்துவிட்டனர். பாவம் மக்கள்!! தேர்தல் முடிந்துவிட்டால் இனி இவர்களை அடுத்த தேர்தலுக்குத்தான் காண முடியும். என்ன செய்ய முடியும் இவர்களை? ஏனெனில் அடுத்த தேர்தலுக்கு இன்னொரு புதிய கோஷத்துடனல்லவா மக்கள் முன் வருவார்கள். எத்தனை தேர்தல் வந்தாலும் இந்த நிலை மாறப்போவதில்லை. மக்கள் வாழ்வில் எந்த முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. இந்த தேர்தல் குறித்து சிலரிடம் கருத்துக் கேட்ட போது அவர்கள் தெரிவித்த கருத்துக்களை தேசம் வாசகர்களுக்காக கீழே தருகின்றோம்.

**விஜயன்**
**(வயது 28. விநியோகச் சாரதி):-**



தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பலரும் மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் வருவதில்லை. மாறாக தாங்களும் தங்கள் குடும்பத்தவர்களும் அனுபவிப்பதற்காக சுயநல நோக்கோடுதான் வருகின்றனர். ஏனெனில் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு அந்தளவுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. (அட்டவணை: 9ம் பக்கம் பார்க்கவும்.)

**ராஜன்**
**(வயது 41. வர்த்தகர், இலங்கை அரசியலில் மிகுந்த ஆர்வம் உடையவர்.:-**

தேர்தல் ஜனநாயகத்தின் வடிவம் என்கின்றனர். ஆனால் கருத்துச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் யாவும் மறுக்கப்பட்ட நிலையில் தேர்தல் என்பது ஒரு கேலிக் கூத்தாகவே இருக்கும். மாற்றுக் கருத்துக்கு இடம் இல்லை. இன்றைய இக்கணத்தில்கூட



கொலைகள் தொடருகின்றன. அண்மையில் கனகம்புளியடி என்னும் இடத்தில் தாய் தந்தை உட்பட ஒரு ஆறுமாத குழந்தை வெட்டிக் கொல்லப்பட்டுள்ளது. இக் குழந்தை செய்த தவறு என்ன? இதுதான் ஜனநாயகமா? ஏன் இந்த வேட்பாளர்கள் இக் கொலையைக் கண்டிக்கக்கூட முன்வரவில்லை? இக்கொலைகளைத் தடுக்க முடியாத தேர்தலால் எமக்கு என்ன பயன்? எனவேதான் நான் இக் கூத்துகளில் ஆர்வமின்றி இருக்கிறேன்.

**ராஜன்**
**(வயது 37. அரசியல் ஆர்வலர்) :-**



நான் தேர்தலில் போட்டியிடப் போகின்றேன். எல்லோரும் உனக்கு என்ன தகுதி இருக்கிறது? என்று கேட்கின்றனர். எனக்கு ஒரு. தகுதியும் இல்லை. ஆதனால்தான் தேர்தலில் நிற்கப் போகின்றேன். தகுதி இல்லாதது தான் எனது தகுதி.

நீ சிறை சென்றாயா? நீ தியாகம் செய்தாயா? நீ ஒரு நாளாவது இயக்கத்தில் இருந்தாயா? போராட்டத்தில் பங்குபற்றினாயா? என்று கேட்கின்றனர். இவை எதுவும் எனக்கு இல்லை என்பது உண்மை தான். மற்றவர்களின் பிள்ளைகள் போராட இயக்கத்திற்கு சென்ற போது எனது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி படிப்பித்தேன். மக்கள் கஸ்டப்பட்ட போது நானும் குடும்பமும் கொழும்பிலும் இந்தியாவிலும் சொகுசாக இருந்தோம். ஆனால் எனக்கு ஆங்கிலம் தெரியும். எனவே பாராளுமன்றத்தில் சாதுரியமாகப் பேசி தமிழீழம் பெற்றுத்தருவேன் என்று மக்களுக்குக் கூறுவேன். மக்கள் எனக்குத்தான் ஓட்டுப்போடுவார்கள். ஏனெனில் மக்கள் முட்டாள்கள் என்று எனக்கு நன்கு தெரியும்.

www.tamilarangam.net



(ராஜன் நகைச்சுவையாகக் கூறினாலும் துரதிர்ஷ்ட வசமாக இதுதான் இன்றைய உண்மை நிலையாகும்.)

வி சிவலிங்கம்
(வயது 55. அரசியல் ஆய்வாளர்) :-



இடைக்கால நிர்வாக அதிகார சபையில் பெரும்பான் மைப் பலம் தமக்கு இருக்க வேண்டும் எனவும், தாமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனவும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் விடுதலைப்புலிகள் தமது இக் கொள்கைகளுக்கு முரண்பட்ட வகையில் தமிழர் தேசியக் கூட்மைப்பின் பின்னால் ஒழிந்து கொள்வதன் நோக்கமென்ன? கூட்டமைப்பை ஏன் கூலிகளாகப் பயன்படுத்த வேண்டும்? தமது நோக்கத்தை மக்கள் முன் சொல்லி தேர்தலில் குதிக்கத் தயங்குவதேன்? மக்களிடம் நேரடியாகச் சென்று வாக்குக் கோரமுடியாத அளவுக்கு நிலமைகள் இருப்பதனால்தான் கவசம் ஒன்றைத் தேடும் நிலை உள்ளதா? ஏக பிரதிநிதிகள் என்பதை சர்வதேசத்திற்கு எடுத்துரைக்கும் இதுபோன்ற சந்தர்ப்பம் வேறெப்போதும் ஏற்படப்போவதில்லை. கேள்விக்குட்படுத்தப்பட்டிருக்கும் ஏகப் பிரதிநிதிகள் என்ற கோரிக்கைக்குச் சரியான பதிலை சர்வதேசம் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஏன் வழங்க முன் வரக்கூடாது?

கெ குகநாதன்
(வயது 35. அரசியல் ஆர்வலர்) :-



தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சமாதானத்திற்கு ஆதரவா அல்லது எதிரான தேர்தலா என விவாதங்க ளும் முன் வைக்கப்படுகின்றன. தமிழ்த் தரப்பு ஒருபக்கம் புலிகளின் கட்டளைக்கு கீழும் மறுபுறும் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை எதிர்த்தும் களத்தில் இறங்குகின் றன. விடுதலைப் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை எதிர்க்கும் ஏனைய தமிழ் அமைப்புக்கள் தாம் ஒரு ஐக்கியத்திற்குள் வரவேண்டிய சூழலும் தற்போது உருவாகியுள்ளது.

வடக்கு கிழக்கிற்கு வெளியே ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கொண்டுவருவதற்கான பிரச்சாரத்தில் புலிகள் இறங்குவார்கள் என்பது சந்தேகமில்லை. ஆனால் சுதந்திர முன்னணி ஆட்சிக்குவந்தால் சமாதானம் குழம்பும் என்பதில் புலிகள் உறுதியாகவே உள்ளார்கள். தந்தை செல்வநாயகம், அண்ணன் அமிர்தலிங்கம், தம்பி பிரபாகரன் வரை காலம் காலமாக, யூ.என்.பி என்ன தமிழ் கொடுமை செய்தாலும் அது பெரிய பாதகமில்லை என்பதுதான் நிலைமையாக இருந்து வருகிறது.


**கவலைகளை களைந்தெறியுங்கள்**

**IMMIGRATION**

அரசியல் அடைக்கல விண்ணப்பங்கள் - மேன் முறையீடுகள்,
நாடுகடத்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள்
மனித உரிமை விண்ணப்பங்கள்
அனைத்து விண்ணப்பங்களுக்கும்

**நீண்டகால அனுபவமுள்ளவரும் அண்மைக் காலத்தில் கூடுதல் மேன்முறையீட்டு வழக்குகளில் வெற்றி பெற்றவருமான எமது இயக்குநர் திரு குலேந்திரனை அணுகுங்கள்.**

**International Refugee Organisation**

1083 Garratt Lane
London
SW17 0LN
(Tooting Broadway - 2 mins from tube)

Tel : 020 8682 4494
: 020 8682 9480
Fax : 020 8682 9922
Mobile : 079 6107 1875

www.tamilarangam.net



எஸ் பாலச்சந்திரன்
(வயது 40 முன்னாள் சிறப்புமுகாம் கைதி) :-



பாராளுமன்றப் பாதை மூலம் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக் காது என்று கண்டு கொண்ட பின்பே தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டப் பாதையை முன்னெடுத் தனர். இந்நிலையில் மக்களை மீண்டும் தேர்தல் பாதைக்கு கொண்டு செல்வது அவர்களுக்குச் செய்யும் மிகப்பெரிய துரோகமாகும். எனவே பாராளுமன்றப் பாதையை நிராகரித்த மக்கள் யுத்தப் பாதையை முன்னெடுத்து புதிய ஜனநாயகப் புரட்சியை வென்றெடுப்பதே தமிழ் மக்களுக்கு உண்மையான விடுதலையை பெற்றுக் கொடுக்கும். இந்திய விரிவாக் கத்திற்கு எதிராக தமிழ், சிங்கள உழைக்கும் மக்களின் ஐக்கியத்தின் மூலம் பாடம் புகட்ட வேண்டும்.

சில அரசியல் தலைவர்களின் கருத்துக்கள் இங்கு தொகுத்துத் தரப்படுகிறது.

ஆனந்தசங்கரி
தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்

தங்களிடையேயுள்ள திறமை வாய்ந்த வேட்பாளர் களை புலிகள் நிறுத்தட்டும், நாங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து அவர்களை வெற்றிபெறச் செய்வோம். இன்றைய சூழலில் எமது கட்சியின் நலனைப் பாதுகாக்க சிறந்த வழி இதுவென நான் கருதுகின்றேன்.

ரவூப் ஹக்கீம்
முஸ்லீம் காங்கிரஸ் தலைவர்

இந்த தேர்தல் இந்த நாட்டிலே இருக்கின்ற தேசிய அரசியல் சக்திகளுக்கு காட்ட விரும்புகின்ற ஒரு தேர்தல் அல்ல. இந்த தேர்தல் விடுத லைப் புலிகளின் அலட்சியப் பார்வையை மாற்றுவதற்கும், சர்வதேச சமூகத்திற்கு முன்னால் முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்கும் முஸ்லிம் தரப்புக் கோரிக்கையை வென்று எடுப்பதற்குமான ஒரு தேர்தலாகும்.

எப்பொழுது முஸ்லிம்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் வருகின்றதோ அன்றுதான் முஸ்லிம்கள் ஒற்றுமைப்படுகின்ற ஒரு வரலாற்றை நாங்கள் கடந்த காலங்களில் பார்த்திருக்கின்றோம். பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் வருகின்ற பொழுது நாங்கள் ஒற்றுமைப் படுவதைத் தவிர வேறு வழியிருக்க முடியாது. அதனை இந்த தேர்தலிலே நாங்கள் நிரூபிக்க வேண்டிய அவசியமிருக்கின்றது.

சி இளம்பரிதி
வி.புலிகளின் யாழ் அரசியல் பொறுப்பாளர்

தமிழ்த்தேசியத்தை வலுப்பெறச் செய்யும் ஒரே நோக்குடன் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுக்க ஒரே அணியில் - ஒரே தலைமையில் - ஒரே கொள்கையில் - தமிழ்க் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் நிற்கின்றது. இதனால் கூட்டமைப்புக்கு விடுதலைப் புலிகள் ஆதரவு வழங்குகின்றனர்.

ரணில் விக்கிரமசிங்கா
இலங்கைப் பிரதமர்

தேர்தலில் வெற்றிபெற்று எதிர்வரும் ஆறு ஆண்டுகளில் புதிய இலங்கையைக் கட்டி எழுப்புவோம். சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்போம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவோம்.

சந்திரிகா குமாரதுங்க
இலங்கை ஜனாதிபதி

எதிர்காலத்தில் எந்த ஒரு வகையிலும் விடுதலைப் புலிகளை யுத்தத்துக்கு தூண்ட இடமளிக்கப்படமாட்டாது. அரசியல் ரீதியாகப் புலிகளைப் பலப்படுத்தி, ஜனநாயக நீரோட்டத்தில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு தேவையான அத்திவாரம் இடப்பட்டிருக்கின்றது. மேலும் பொதுமக்களுக்குக் கூடுதலான நன்மை கிடைக்கும் வகையில் புதிய பொருளாதாரத் திட்டத்தை கூட்டமைப்பு வகுத்திருக்கிறது.

---

வெற்றி பெற்று வரும் இந்த அரசியல் தலைவர்க ளின் தேர்தல் கோசங்களை நடைமுறைப்படுத்த வைப்பதற்கு மக்களிடம் எந்த அதிகாரமும் இல்லை. அதனால் கோசங்கள் கொட்டாவியாகிவிடுகிறன.

## கடிக் கவிதை

*என் அன்பே*
*ஓடிப் போகலாமா என - நான்*
*அடிக்கடி கேட்பது - நான்*
*உன்னிடம் கொண்ட*
*காதலால் அல்ல....*
*கிரடிட் காட்டில்*
*பட்டகடனால்*

கடனில் லண்டன் வந்த டமிள் டீச்சர்
A for Amex
B for Barclay card
C for Connect card
D for Diners

காயத்திரி
கொன்ஸ்ரன்ரைன்

www.tamilarangam.net



# ஏஏகம் ஏகபிரதிநிதித்துவம்

சுதந்திர இலங்கையின் 22 மாவட்டங்களுக்கான 13வது பொதுத் தேர்தல் ஏப்பிரல் 2ல் நடைபெற இருக்கிறது. 225 ஆசனங்களில் 196 ஆசனங்களுக்கு 24 கட்சிகளையும் 192 சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 5,698 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தல் திகதி நெருங்க நெருங்க தமிழ் பகுதிகள் உட்பட நாடு முழுவதும் தேர்தல் வன்முறைகள் அதிகரித்து உள்ளது. வெளிநாட்டுக்கு வந்தவர்கள் இறந்தவர்களெல்லாம் வாக்களிக்க உள்ளனர்.

வி.புலிகள் முதல் தடவையாக பகிரங்கமாக தேர்தல் வேலைகளில் ஈடுபட்டு உள்ளனர். இத்தேர்தலில் தமிழ் கூட்டமைப்பின் பின்னிருந்து இயக்கும் புலிகள் தங்கள் ஏகபிரதிநிதித்துவத்தை காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். இவர்களது கட்டுப்பாட்டில் 230,000 வாக்காளர்கள் என மதிப்பிடப்படுகிறது. மட்டக்களப்பு 80,000; திருமலை 12,000; யாழ்ப்பாணம் 6,000; முல்லைத்தீவு 86,000; கிளிநொச்சி 50,000.

வடக்கு கிழக்கில் 32 ஆசனங்களுக்காக 20 வரையான கட்சிகளையும் 30க்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 989 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

| மாவட்டம் | ஆசனங்கள் | வேட்பாளர்கள் |
|---|---|---|
| யாழ்மாவட்டம் | 9 | 120 |
| வவுனியா | 6 | 171 |
| திருகோணமலை | 5 | 112 |
| மட்டக்களப்பு | 5 | 176 |
| திகாமடுல்ல | 7 | 410 |

வடக்கு கிழக்கில் புலிகளின் ஆதரவில் களம் இறங்கி உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிரதான கட்சியாக உள்ளது. இங்கு ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தனித்து போட்டி இடுகிறது. புலிகளின் ஆதரவுக் கட்சியான மலையக மக்கள் முன்னணி மலையகத்தில் தனித்து போட்டி இடுகிறது.

வடக்கு கிழக்கில் தற்சமயம் 400,000 மக்கள் இடம் பெயர்ந்து உள்ளதாகவும் அவர்களில் 80 வீதமான வர்கள் வடக்கு கிழக்கிலேயே வாழ்வதாகவும் ஐநா அகதிகள் அமைப்பு தெரிவிக்கிறது. இடம் பெயர்ந்த வர்களில் 300,000 உறவினர் நண்பர்களுடனும் 100,000 பேர் அகதி முகாமிலும் உள்ளதாகவும் மதிப் பிடப்படுகிறது. இது வாக்குரிமையை பாதிக்கவுள்ளது.

யுத்தநிறுத்த காலத்தில் இடம்பெற்ற 50க்கும் மேற்பட்ட கொலைகளின் பின் புலிகள் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக தெரிவித்துள்ள பிரித்தானிய அகதிகள் அமைப்பு அறிக்கை சுதந்திரமான தேர்தலுக்கு புலிகள் அனுமதிக்கமாட்டார்கள் என குற்றம்சாட்டுவதை சுட்டிக்காட்டி உள்ளது.

## பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள்

சம்பளம் - மாதாந்தம் ரூ.22,000.

1. பொழுதுபோக்கு - மாதாந்தம் ரூ.1000
2. எரிபொருள் - மாதாந்தம் ரூ.7500
3. செல்போன் - மாதாந்தம் ரூ.2000
4. நாடாளுமன்ற அமர்வுக்கு - மாதாந்தம் ரூ.4000
5. ஒவ்வொரு சாரதிக்கும் - மாதாந்தம் ரூ.3500
6. சர்வதேச அழைப்பு வசதிகளுடனான தொலைபேசி
7. சுங்கத்தீர்வையின்றி போட்டோப் பிரதி இயந்திரம் - மாதாந்தம் ரூ. 685
8. சுங்கத் தீர்வையற்ற விலையில் தட்டச்சு இயந்திரம் மாதாந்தம் ரூ. 425 படி
9. 30 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆடம்பர சொகுசுக் கார்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி.
10. அடுத்த 5 வருடங்களில் இன்னொரு சொகுசுக்கார் இறக்குமதி செய்வதற்கான அனுமதி.
11. கொழும்பு நகரில் இருந்து 25 மைல்களுக்கு அப்பால் தெரிவு செய்யப்பட்டு வசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மூன்று படுக்கையறைகளுடன், இரண்டு அடுக்கு வீடு மற்றும் வசதிகள். (இதற்கு வாடகையாக ரூ.1000 மட்டும் அறவிடப்படும்). ஏனைய வசதிகள் -
12. உணவு - நாடாளுமன்ற உணவுச்சாலையில் மிகக் குறைந்த விலையில் உணவு வசதி. வெளியே 600ரூபா காலை உணவு 6 ரூபாவுக்குக் கிடைக்கும். 1500ரூபா மதிய உணவு ரூ.15 இற்குக் கிடைக்கும்.
13. வாகனம் ஒன்றுக்கு வருடாந்தம் 5 ரயர்கள், மற்றும் ரியூப்கள்.
14. ஐந்து வருடங்களின் பின்னர் ஓய்வூதியம்.
15. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும் முன்னர் விலகிச்செல்வதானால், 4 முதல் 5 லட்சம் ரூபா வரை கிடைக்கும்.
16. பதவிக் காலத்தில் தபால் செலவுப்படியாக மாதாந்தம் ரூ.7500 கிடைக்கும்.
17. இலவச மருத்துவ வசதி. ஆயுட் காப்புறுத்தி.
18. ஆகக் குறைந்தது ஐந்து வெளிநாட்டுப் பயணங்களுக்கு அரசாங்கம் பொறுப்பேற்கும்.
19. இலவச எழுது பொருட்கள்

இப்படி இன்னும் பல.

இவ்வாறான சலுகைகளை அனுபவிப்பதற்காகவே பலரும் எம்.பி ஆவதற்கு துடிக்கின்றனரோ?

www.tamilarangam.net



**பத்து ஆண்டுகளுக்கு முன்பு நிகராகுவாப் புரட்சியாளர் தொமஸ் போர்ஹே, கியுபாவின் ஃபிடல் காஸ்ட்ரோவைச் சந்தித்து விவாதித்தவை, ஸ்பானிய மொழியிலிருந்து ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இந்நூலை அமரந்த்தா அவர்கள் பீடல் காஸ்ட்ரோ: நேருக்கு நேர் என்ற தலைப்பில் தமிழாக்கம் செய்துள்ளார். இது தமிழகத்தின் கோயமுத்தூர், புதுமலர் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டு உள்ளது. காஸ்ட்ரோவின் சந்திப்பில் ஆறு பகுதிகள் மட்டுமே தமிழ் மொழிபெயர்ப்பில் இடம்பெற்றுள்ளது. தமிழில் மொழிபெயர்த்த அமரந்த்தா உலகில் புரட்சிகர சக்திகளின் இறுதி நம்பிக்கையாகத் திகழ்பவர் ஃபிடல் காஸ்ட்ரோ என்று தெரிவிக்கிறார். அவரின் நேர்முகம் தேசம் வாசகர்களுக்கு பயனுள்ளதாய் அமையும் என்பதால் இந்நூல் இங்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.**

# ஃபிடல் காஸ்ட்ரோ



## நேருக்கு நேர்

தோழர் வேலு

நக்சலைட் தோழர்



இந்நூல் கியுபா பற்றியும், ∴பிடல் காஸ்ட்ரோ பற்றியும் அருகில் சென்று அறிந்து கொள்ளவும், பல்வேறுபட்ட புதிய பார்வைகளை நமக்குள் ஏற்படுத்துகின்றன. கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சி, சோவியத் ஒன்றியத்தின் ஆட்சி மாற்றங்களுக்குப் பின்பு, மார்க்சிய தத்துவத்தின் மீதும், புரட்சிகர சக்திகளின் மீதுமான நம்பிக்கையை இழக்கும் விதமான ஐயப்பாடுகளை ஏகாதிபத்தியவாதிகளும், அதன் எடுபிடிகளும் எழுப்பத் தொடங்கிவிட்டனர். முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், புதிய தாராளவாதம் ஆகிய தத்துவங்கள் மட்டுமே உலகில் நிலைத்திருக்க வேண்டும் என்று விரும்பும் ஏகாதிபத்தியவாதிகள், இதற்கு எதிரான, ஒத்துப்போகாத மார்க்சிய தத்துவத்தை துடைத்தழித்திட விரும்புகின்ற இவர்கள்; தத்துவ நீக்கம் என்று பேச ஆரம்பித்துவிட்டனர் என்கிறார் ∴பிடல் காஸ்ட்ரோ.

மேலும், மார்க்சிய தத்துவத்தின் மீது குறைபாடுகளை நிறுவி குழப்புவதற்குப் பல்வேறு முயற்சிகளை ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டதுடன், மார்க்சியத்தின் மீதான நம்பிக்கை உள்ள சக்திகளுக்கும் குழப்பம் ஏற்பட்டுள்ளதை இந்நூலில் சுட்டிக்காட்டுகிறார்.

இந்தக் குழப்பமான சூழலை கியுபா எப்படி எதிர்கொண்டது என்பதையும், கியுபாவிலும் பல உருமாற்றங்களும், வழி தவறுதல்களும் ஏற்பட்ட பின்னர், இந்த குழப்பங்களில் இருந்து விடுவிப்பதற்கு சேகுவேராவின் கருத்துக்கள் எவ்வாறு உதவி புரிந்தன என்பதை விளக்குகின்றார் ∴பிடல் காஸ்ட்ரோ. அறுபதுகளின் தொடக்க ஆண்டுகளிலேயே, கிழக்கு ஐரோப்பாவின் மாற்றங்களை உற்றுக் கவனித்து வந்த சேகுவேரா

**சோஷலிசத்தைக் கட்டிய மைக்க முதலாளித்துவ விதிமுறைகளைப் பயன்படுத்தக் கூடாது**

என்று தீர்மானமாக இருந்தார். கிழக்கு ஐரோப்பாவின் வீழ்ச்சிக்கான காரணம் தீவிர முதலாளித்துவ விதிமுறைகளை பயன்படுத்தியதுதான் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகம் பற்றி, ∴பிடல் காஸ்ட்ரோ அதிகமான கருத்துக்களை முன்வைக்கிறார். ஏற்றத் தாழ்வுகள் நீடிக்கின்ற முதலாளித்துவ ஜனநாயகத்தை அம்பலப்படுத்துகிறார். "பணம்" உள்ளவர்களின் ஜனநாயகத்தைப் பற்றியும், தேர்தலில் இவர்களின் "பண நாயகத்தின்" பங்களிப்பைப் பின்வருமாறு விபரிக்கின்றார்.

**மனிதர்களிடையே சமத்துவமின்மை நீடிக்கும் காலம்வரை எவ்வகை ஜனநாயகமும் இல்லை, இருக்கவும் முடியாது.**

ஐரோப்பிய ஜனநாயகத்தினைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "ஐரோப்பிய நாடுகள், மூன்றாம் உலகில் இருந்தும், காலனிகளில் இருந்தும், நவகாலனிகளில் இருந்தும், செல்வத்தைக் கொள்ளையடித்து சிறந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்துவிட்டன. ஐரோப்பாவில் வேலைகள் செய்வது ஆபிரிக்கர்கள், ஆசியமக்கள், அல்ஜீரிய, கருப்பு ஆபிரிக்க மக்கள், துருக்கியர்கள், இன்ன பிறநாட்டு மக்கள். கடினமான வேலைகளை.


www.tamilarangam.net

SIRUVAR THESAM சிறுவர் தேசம்

SIRUVAR THESAM

March 04 / April 04

04



செல்வி கோபிகா நந்தகோபால் குரு ஸ்ரீமதி சுதாமதி சிறிசற்குணம் அவர்களிடம் வீணை கற்கிறார். இவரது அரங்கேங்கேற்றம் கடந்த ஆண்டு ஓகஸ்டில் இடம்பெற்றது.

# The Veena

By: Gopiha Nandagopal

I cradle this piece of ancient history in my arms,
So precious, so pure, so divine,
My hands plucking, floating, almost dancing on the frets,
Feeling of joy, love, happiness and peace of resonate through me,
Soon this earthy world becomes unrecognizable,
A voice so beautiful, rich and alluring fills the silence,
My heart stirs as it rings in the hollows of my soul,
Tranquility surrounds me,
All time has stopped,
I am complete.

தற்காப்புக்கலையான கராத்தே பயின்று வரும் மாணவர்களுக்கான ஆண்டு விழா இலண்டன் ஈஸ்ற்காமில் சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவிகளும் அவர்களது பெற்றோரும் கலந்து கொண்டனர். எக்சகாய் இசன்றியூஸ் அமைப்பின் பிரித்தானியக் கிளை இவ்வகுப்புகளை நடாதத்தி வருகிறது. இப்பள்ளியில் சிறார்களுக்கான விசேட பயிற்சிகளும் நடத்தப்படுகிறது.



www.tamilarangam.net



# Our Adventure

Niruna Mensi
**Age 8, Y4C**



...We got lost and wandered here and there. We were astonished to see no trees to climb and adventure. We decided to play "hide and seek" in the mist. There were no animals, no people around except small bushes. It was windy and misty. We were longing for a shelter. We walked and walked and finally saw a tiny triangular figure ,standing still, far away. We journeyed around the bushes and approached a figure and realized the figure we saw before was a square with a pitched roof, four walls, two doors, one at the front, the other at the rear and eight windows.

We got closer and closer and we were surprised to see that it was a house. We knocked at the door, but there was no answer. We were wondering and pondering and wandered around the house. We suddenly heard a human voice. " Perhaps it's a ghost A danger! peril! hazard! ahead," said my friend. "Lets go back ." " May be this house is haunted," so I advised my friend. Then to our dismay we saw a signboard pointing at the house saying " The M_ _r lodge." We were determined to go in and ask for help even though we were told at school not to talk to strangers.

We had no other alternative, so we went in to the lodge. There was a person sitting at the desk busy writing and concentrating on what he was doing. We went up to him and explained about us getting separated from the main school by an unexpected mist. We gave him the school name, the name of the person in charge, the badge we were wearing and the telephone number. He phoned and the party came and collected us from the lodge. We were as happy as a lark.

அன்புடன் பெற்றோர் மற்றும் சிறார்களுக்கு :


ஒவ்வொரு சிறுவர் தேசம் இதழையும் ஒவ்வொரு தமிழ் பாடசாலையின் அல்லது ஒவ்வொரு வகுப்பினது இதழாக வெளியிடுவதற்கு விரும்புகிறோம். ஆர்வமுள்ள மாணவ மாணவிகள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். மேலும் தமிழ் சிறார்களின் நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்களையும் சிறுவர் தேசத்தில் சேர்க்க உள்ளோம். இந்நிகழ்ச்சிகள் பற்றிய செய்தியை சிறுவர் தேசத்திற்கு படத்துடன் அனுப்பி வைக்கவும். உங்களிடம் உள்ள தகவல்களை மற்றைய சிறார்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். இவற்றுக்கு பெற்றோரிடம் இருந்து பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம். மேலும் பல நல்ல விடயங்களுடன் மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

www.tamilarangam.net






# Dinosaurs



By : Agasty
**Age 7, School: St. Teresa.**

Dinosaurs ruled our Earth until their death arrived. T.rex has hundreds of monstrous cousins, including Tarbosaurus and Albercosaurus. The meanest, well not really the biggest or worst dinosaur around, was the Giganotosaurus, which lived about 100 years ago. The creature had a skull, the same size of T.rex, but its legs were longer and its body was heavier. However, being big has its disadvantages, if T.rex was really heavy it would have been injured quicker, if he or she fell over while running at its full speed of 30 km/h.

Dinosaurs lived in hot places with volcanoes. If they had no sun or volcanoes, they would have died. The T.rex and some other dinosaurs like raptors eat meat, others only ate plants. Those that hunted other animals for food were known as predators, the hunted were called prey.

When the dinosaurs became extinct, they left bones behind called fossils.

www.tamilarangam.net



இது ஓர் ஆங்கில சஞ்சிகையில் வெளிவந்தது. இதனை சிறுவர் தேசத்திற்கு அனுப்பி வைத்தவர்:

Dylon Ramesh
**Age 9**
**Edgware**


# Something to think

If we shrink the earth's population to a village of precisely 100, people, with all the existing human ratios remaining the same, it would look something like the following:

There would be:

57 Asians
21 Europeans
14 from the Western Hemisphere, both north and south
8 would be Africans
52 would be female
48 would be male
70 would be non-white
30 would be white
70 would be non-Christian
30 would be Christian
89 would be heterosexual
11 would be homosexual
6 people would possess 59% of the entire world's wealth and all 6 would be from the United States
80 would live in substandard housing
70 would be unable to read
50 would suffer from malnutrition
1 would be near death
1 would be near birth
1 (yes, only 1) would have a college education
1 (yes, only 1) would own a computer









பாரதி பாலர் பாடசாலை மாணவ மாணவிகள் சிறுவர்களுக்கான 'தேம்ஸ்' இதழை அண்மையில் வெளியிட்ட போது எடுக்கப்பட்ட படம். இச்சஞ்சிகை பற்றிய விபரம் சென்ற தேசம் இதழில் வெளிவந்தது.

www.tamilarangam.net



கட்டுமான வேலைகளை புலம்பெயர்ந்து வந்தவர்கள் தான் செய்கிறார்கள்'' என்று இந்த முதலாளித்துவ ஜனநாயகத்தின் சீரழிவுச் செயலை அம்பலப்படுத்து கின்றார். ∴பிடல் காஸ்ட்ரோ.

வர்க்க வேற்றுமை முற்றிலுமாக அகற்றிய கியுபா ஜனநாயகத்தின் நடைமுறைகளை நேர்காணலில் விவரிக்கிறார்.

ஐக்கிய நாடுகளின் சபையில் எப்படி ஜனநாயகம் இன்மை காணப்படுகின்றதென்பதை விளக்குகின்றார். அதிகமான மக்கள் தொகை கொண்ட நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் வழங்கப்படவில்லை. சில நாடுகளுக்கு நிரந்தர உறுப்பு நாடு அந்தஸ்தும் வழங்கப்படவில்லை. பொருளாதார அடிப்படையில் அதிகாரம் வாய்ந்த நாடுகளுக்கும் வீட்டோ உரிமை இல்லை. இராணுவ பலமும், ஆதிக்கக் கட்டுமானமும் கொண்ட நாடுகளுக்கு மட்டுமே வீட்டோ வழங்கப்பட்டுள்ளது. இதைவிட ஜனநாயகத்திற்கு இழைக்கப்படும் அநீதி வேறு எதுவாக இருக்கமுடியும் என்கிறார் ∴பிடல் காஸ்ட்ரோ. மேலும்

உண்மையான ஜனநாயகம் முதலாளித்துவ
அமைப்பினுள் இருக்கமுடியாது.
அது சோசலிச அமைப்பினுள்
மட்டுமே நிலவ முடியும்.

என்கிறார். "ஐ.நா.வைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முனையும் அமெரிக்காவின் செயல் ஜனநாயகத்தின் மிகப்பெரிய கேலிக்கூத்தென அம்பலப்படுத்துகிறார்.

புரட்சிக்குப் பின் 30க்கும் மேற்பட்ட ஆண்டுகளில் கியுபாவில் மக்களுக்கு எதிராக இராணுவத்தையோ, காவல்துறையையோ ஒருபோதும் பயன்படுத்தியது இல்லை என்கிறார் ∴பிடல் காஸ்ட்ரோ. ஜனநாயகம் பற்றிப் பேசித்திரியும் நாடுகள், காவல்துறையும் இராணுவத்தையும் கையில் வைத்திருப்பதால் மட்டுமே உயிர்பிழைத்துக் கொண்டிருக்கின்றன என்கிறார்.

வளர்ந்த நாடுகள் உள்ளிட்ட உலகின் மற்றப் பகுதிகளில் மூன்றாம் உலக நாடுகளில் உள்ளதைப் போல குழந்தைகள் பிச்சை எடுப்பதோ, வீடின்றி இருப்பதோ, மருத்துவவசதியின்றி இருப்பதோ எழுதப் படிக்கத் தெரியாமலோ, விபச்சாரத்தில் ஈடுபடுத்துவது போன்றோ, போதைப்பொருளுக்கு அடிமைப்படுவது போன்றோ எதுவுமே கியுபாவில் இல்லை. மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கியுபாவை விட அதிக கவனம் செலுத்திய நாடு உலகில் வேறெதுவும் இல்லை என்கிறார் ∴பிடல் காஸ்ட்ரோ.

இவை அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது என்று துணிவாக அறிவிக்கும் ∴பிடல் காஸ்ட்ரோ, அமெரிக்கா உட்பட வேறு எந்த நாடும் இதுபோன்று அறிவிக்க முடியுமா என்கிறார். இனப்பாகு பாட்டை துடைத்தெறிந்து பால் பேதமின்றி சமவாய்ப்புக்கள் உள்பட முழு சமத்துவம் கியுபா மக்களுக்கு கிடைத்துள்ளது என்கிறார்.

உலகின் "பாதுகாவலனாக" அறிவித்துத் திரியும் அமெரிக்காவில், இதுவரைக்கும் தூக்குத் தண்டனைக்கு உட்பட்டவர்கள் பெரும்பாலும், கறுப்பர்களும், நாடுவிட்டு நாடுவந்து குடியேறியவர்களும் மட்டுமே. இவர்கள் வேலையின்றி வேறுவிதமான ஆதரவேதுமின்றி, உயிர் வாழ்வதற்காக குற்றங்களில் ஈடுபடுகின்றவர்கள். அமெரிக்காவின் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை களுக்கும், அந்நாட்டுக் கைதிகளில் பலர் குற்றங்களில் ஈடுபடும் கட்டாயத்திற்கு ஆளாவதற்கு நேரடித் தொடர்பு இருக்கின்றது. அமெரிக்க வெள்ளைத் திமிரின் நிறவெறியை அம்பலப்படுத்துகின்றார் ∴பிடல் காஸ்ட்ரோ.

உலகில் அமெரிக்கா, கியுபா போன்ற நாடுகள் மக்களிடம் ஆயதம் வழங்கியுள்ளன. ஆனால், குற்ற விகிதம் அதிகரித்துள்ள நாடு அமெரிக்கா மட்டுமே. பெண்களுக்கு எதிரான வேற்றுமைகள் மறைந்துவிட்டன, தொழில்நுட்பப் பணியில் அறுபது விழுக்காடு பெண்கள். வேலைவாய்ப்பு, பாதுகாப்பு, கல்வி, உடல்நலப் பராமரிப்பு என்பவற்றில் பெண்கள் உயர்ந்தநிலையில் உள்ளனர். ஆனாலும், ஆணாதிக்கம் முற்றிலுமாக ஒழிக்கப்பட வில்லை என்பதையும் ஒப்பக்கொள்கிறார் காஸ்ட்ரோ.

∴பிடல் காஸ்ட்ரோவின் நூல்வாசிப்பு வேட்கை யானது தீராத ஒன்றாகவே உள்ளது. 1953 முதல் 1955 வரை சிறை வாழ்க்கையில், தனிமைச் சிறையில், கொசுக் கடிகளுக்கு மத்தியில் உலகின் அனைத்து புரட்சிகர இயக்கங்களைப் பற்றிப் படித்து முடித்திருக்கிறார் காஸ்ட்ரோ. இலத்தீன் அமெரிக்கப் புரட்சியாளரின் எழுத்துக்கள் தனது நாட்டின் புரட்சிக்கு பயன்பட்டதாகவும் சைமன் பொலிவர் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர் என்றும் கூறுகின்றார். பொலிவரும், மார்த்தியும் கியுபப் புரட்சிக்கு வழிகாட்டியாக இருப்பதையும், மார்த்தியின் கவிதைகள் தன்னை பெரிதும் கவர்ந்ததற்கான காரணத்தை விவரிக்கிறார்.

ஏய்ட்ஸ் தடுப்பிற்கு அதிக அளவில் சேவையாற்றி வருவதுடன், ஓரினப்புணர்ச்சி குறித்த கியுபாவின் அணுகு முறையில் மாற்றம், மருத்துவத் துறையில் உலகம் முழுவதும் கியுபாவின் பங்களிப்பைப் பற்றியும் விரிவாக விளக்குகின்றார் ∴பிடல் காஸ்ட்ரோ. இந்நூலில் இடம் பெற்ற விசயங்கள் கியுபாவின் மீதான பொய்யான பிரச்சாரங்களுக்கு எதிராக ∴பிடல் காஸ்ட்ரோவின் தன்னிலை விளக்கங்களுடனும், மற்றும் மார்க்சிய நிலையிலிருந்து விலகி ஒரு ஜனநாயகவாதியின் குரலாகவே பெரும்பாலான இடங்களில் ஒலித்திருப்பதைப் பார்க்க முடிகின்றது.

www.tamilarangam.net



இந்நூலின் பதிப்பாளரான கன.குறிஞ்சி. அணிந் துரையாளரான S.N.நாகராசன் போன்ற முற்போக்காளர் களிடம் வெவ்வேறு நோக்கங்கள் இருப்பினும் தமது கருத்துக்களை மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்று தன் மண்வாசனையைக் கமழச்செய்யத் துடிக்கிறார்கள். இந்நூலில் ஸ்டாலினைப் பற்றிய விமர்சனம் இடம் பெறாவிடிலும், தனது சொந்த விருப்பு, வெறுப்புகளுடன் ஸ்டாலினைப் பற்றி விமர்சித்திருப்பது S.N.நாகராசனின் மார்க்சிய நேர்மையை அடையாளம் காட்டுகிறது. இந்நூலை தமிழில் மொழி பெயர்த்த அமரந்தா அவர்களோ கியுபாவின் மீதான காதலால் இன்றைய உலகில் புரட்சிகர சக்திகளின் இறுதி நம்பிக்கையாகத் திகழும் கியுபத் தலைவர் ஃபிடல் காஸ்ட்ரோ என்று உணர்ச்சிவசப்படுகிறார்.

இந்நூல் மொழிபெயர்ப்பு வரிசையில் சிறப்பான ஒன்று என்பதை மறுக்க முடியாது. மொழி பெயர்ப்பு என்ற அடையாளமே தெரியாது மிகஅருமையாக மொழி பெயர்த்துள்ளார் அமரந்தா அவர்கள். காலக்குறி அ.ஐ.கான் அட்டைப்படத்தை அருமையாக வடிவமைத்து உள்ளார். மக்கள் மருத்துவர் வி.புகழேந்தியின் கருத்து ரையும் வெளியில் முகம்காட்டாத நடராசன் அவர்களின் பங்களிப்பையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. கியுபா அனுபவங்கள் இலத்தீன் அமெரிக்க அனுபவங்களை புரிந்துகொள்ள இந்த நூல் மிகவும் உதவுகின்றது. ❑

நூலைப் பெற்றுக் கொள்வது தொடர்பான விபரங்களுக்கு :
kurinjee@yahoo.com

***சிரிப்பு சிந்திப்பு*** : பாலன் (இலண்டன்)

| | |
|---|---|
| புஷ் | :ஹலோ ஓ....... |
| சந்திரிகா | :நான் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா. |
| புஸ் | :இலங்கையா? அது எங்க இருக்கு? |
| சந்திரிகா | :இந்தியாவிற்கு கீழே இருக்கு. அங்க நான் தான் ஜனாதிபதி. |
| புஷ் | :ஓகே. ஓகே.. என்ன விசயம்? |
| சந்திரிகா | :நீங்க பயங்கரவாதத்தை ஒழிக்க ரொம்ப பாடுபடுறீங்க. சதாமையும் பிடித்திட்டீங். இங்கையும் பிரபாகரன் என்று ஒருத்தன் இருக்கான். படையை அனுப்பி அவனை பிடிக்க முடியுமா? |
| புஷ் | :பயங்கரவாதத்தை ஒழிக்கிறது தானே என் வேலை. பிடித்து அடைத்திடலாம். அது சரி உங்க நாட்டில பெற்றோல் கிணறு இருக்கா? |
| சந்திரிகா | :அப்படியெல்லாம் ஒண்டும் இல்லை. |
| புஷ் | :பெற்றோல் கிணறு இல்லையா. வையடி போனை. என்ன ஆட்டத்திற்கெடி போண் எடுக்கிறீங்கள். இடியற்.. இடியற்.. |


புலம் பெயர்ந்த, இலங்கை, இந்திய தமிழ் படைப்புகளின் களஞ்சியம்

அறிவாலயம்

புத்தகசாலை - பாரிஸ்

Paris Arivalayam

Paperterie - Librairie

புதிய தேடலுக்கான நூல்கள்
சஞ்சிகை வெளியீடுகள்
மற்றும்
பாடசாலை - அலுவலக உபகரணங்கள்
தொலைபேசி அட்டைகள்
அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

7, rue Perdonnet
75010 Paris
France

Tel : 00 331 (0) 1 44 72 03 04
Fax : 00331 (0) 1 44 72 03 35

www.tamilarangam.net



# வம்பவாரிசு ஜெயராஜ் ஆருக்கு வைக்கிறார் ஆப்பு



கி பி அரவிந்தன்
அப்பால் தமிழ் நெறியாளர்

ஈழத்தின் இலக்கிய சஞ்சிகைகளில் ஒன்றான மல்லிகையில் தான் இந்தக் கம்பவாரிதி ஜெயராஜ் என்பவரின் 'வாராதே! வரவல்லாய்..' என்ற புலம் பெயர்ந்தோருக்கான அறிவுரைக் கட்டுரை முதலில் வெளிவந்திருக்கின்றது. (மல்லிகை ஜீவா கம்பவாரிதியுடன் இணையும் இந்தப்புள்ளி ஆச்சரியம் தருகின்றது. தற்போதைய சந்திரிகா-வீரவன்ச கூட்டுப்போல) இக்கட்டுரை தாயகத்திற்கு வெளியே 1980களின் பின் வாழத்தலைப்பட்ட ஈழத்தமிழ் பேசும் மக்களின் வாழ்வியல் கோலங்களை இகழ்ந்து பேச முற்பட்டுள்ளது என்பது மட்டும் அதில் துலக்கமாகத் தெரிகின்றது. (சத்தியமாய் சொல்கிறேன் உங்களை இழிவுபடுத்த இக்கட்டுரையை எழுதவில்லை என்ற வாக்கு மூலத்தையும் மறக்காமல் கட்டுரையாளார் குறிப்பிட்டு உள்ளார்.)

தன்னை ஆத்மீகவாதி என்றும், இலண்டன் கனடாவுக்கு சென்றுவந்தவரென்றும், (இந்த நாடுகளுக்குச் சென்றுமீள உதவியவர்களுக்கு தேசம்கடந்தும் நேசங்கடவா நெஞ்சங்கள் என்ற தொப்பியும் அவரால் வழங்கப்பட்டுள்ளது) ஆன்றவிந்தடங்கிய கொள்கைப் பெரியோன் என்றும் தன்னிலை விளக்கம் கூறி, புலம் பெயர்ந்து வாழும் அற்பர்களுக்கான அறிவுரைகளை மன்னிக்க வேண்டும் அருள்வாக்குகளை கட்டுரை முழுவதும் அருளியுள்ளார் கம்பவாரிதி ஜெயராஜ்.

கம்பவாரிதி என்பது கம்பராமாயணம் என்னும் இலக்கியத் தடாகத்தில் மூழ்கித் திளைத்தவன் என்றும் அர்த்தம் கொள்ளலாம். மேலும் அதனைச் சுருக்கமாக, கம்பவாரிசு என்றும் எடுத்துக் கொள்ளலாம். (இதனால் அவரது மனம் மகிழ்ந்தால் அடியேன் பாக்கியசாலிதான். சாது ஒருவரைத் திருப்திப்படுத்திய, சாந்தப்படுத்திய பேறு எனக்குக் கிட்டட்டும்) இந்தக் கம்பவாரிசு என்ற முன்னொட்டுத்தான் அவருக்குப் பொருத்தம் என்பது என் தாழ்மையான கருத்து. ஏன் என்பதைப் பின்னர் கூறுவேன். (உண்மையில் சங்க இலக்கியம் தொட்டு நிற்கும் தமிழிலக்கியப் பரப்பை பெருங்கடலெனெக் கொண்டால் இராமாயணம் ஒரு குளம் குட்டை அளவே இருக்கக் கூடும். அதற்காக, கம்பராமாயணத்தை மட்டுமே உருப்போடும் கம்பவாரிதியை ஒரு குட்டையில் ஊறிய மட்டை எனக் கூறுவது அபச்சாரமாகும்)

## ஒரு குடம் பாலும் துளித்துளியாய் நஞ்சும் கம்பவாரிதி அருளும் உபதேசம்

வடமொழியில் வான்மீகியால் எழுதப்பட்டதான இராமகாதையைத் தழுவி தமிழில் கம்பனால் எழுதப் பட்டதுதான் கம்பராமாயாணம் என்பதை நாம் அறிவோம். ஏறத்தாழ பத்தாம் நூற்றாண்டின் பின்னால் தமிழில் எழுதப்பட்டதான இக்காப்பியம் இலங்கை மன்னனான வெற்றியை உடைய இராவணனை வெற்றி கொண்ட திருமாலாகிய இராமனது வீரத்தை விளக்கிச் சொல்கின்றது என்பதைப் படித்தவர்கள் அறிவர்.

ஆனால் இந்த இராமாயணம் தமிழ் மக்களை அரக்கரென இழிவுபடுத்துகிறது, அவமானப்படுத்துகிறது என்ற குற்றச்சாட்டும் விளக்கமும் அறிஞர்களால், சமூக சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படுவதையும் நாம் மறந்துவிடுதல் கூடாது. அதனால் இதற்கு மறுப்பாக, புலவர் குழந்தை அவர்களால் இராவணகாவியம் எழுதப் பட்டதும் சமூக விரோத இலக்கியமாக அடையாளம் காணப்பட்ட இராமாயணம் தீயிட்டு கொளுத்தப்பட வேண்டுமென்ற முழக்கங்கள் முன்வைக்கப்பட்டதும் ஒரு அரை நூற்றாண்டுக்கு உட்பட்ட நிகழ்வுகளாகும்.

இராமாயணத்தின் உள்ளடக்கம் தமிழர் விரோதம் அல்லது சமூக விரோதம் கொண்டதாக இருக்கும் அதே வேளையில் இராமாயணத்தைத் தழுவி, தமிழில் கம்பனால் எழுதப்பட்டதான கம்பராமாயணம் காமரசம் ததும்பியது பாலியல் கிளர்ச்சி ஊட்டுவது என்ற குற்றச்சாட்டும் ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்படுவது உண்டு. அதிலும் தனது காவிய நாயகியான சீதையின் உறுப்புகளான அல்குல்(பெண்குறி), கொங்கை, தொடை பற்றியெல்லாம் காமரசம் சொட்டச் சொட்ட கம்பன் வர்ணனை செய்துள்ளான். இதனால் கம்பன் ஒரு வம்பன் என்ற வழக்காறும் தமிழில் புழக்கத்தில் உள்ளதை நாம் நினைவில் கொள்ளலாம்.

காவிய நாயகியான சீதை சிறைவைக்கப்பட்ட அசோகவனத்தில் இருந்த வண்ணம் துயருற்று அழுத

www.tamilarangam.net



கண்ணீர் எவ்வகையாக வடிந்து செல்கின்றது என்பதைக் கம்பன் வர்ணிப்பதிலும், காட்டுக்கு அனுப்பப்பட்ட இராமனும் குழுவினரும் குகனின் உதவியுடன் படகில் ஆற்றைக் கடக்கையில் தண்ணீரத் திவலைகளால் ஆடை நனைந்த பெண்களை வர்ணிப்பதிலும், சீதையின் அல்குலின் அளவை பாம்பின் படத்துடன் ஒப்பிடுகையிலும் (இன்னும் பல கட்டங்களைச் சுட்டிக்காட்டலாம்) கம்பன் ஒரு வம்பன் என்பது நிருபணமாகும்.

இப்படிக் கம்பன் ஒரு வம்பன் என்னும் போது கம்பவாரிதி வம்பவாரி யாவதும் அல்லது கம்பவாரிசு வம்பவாரிசாவதும் ஆச்சரியமில்லை. அதிலும் கட்டுக்குடும்பியும் காவியும் தரித்த ஜெயராஜ் வாராதே வரவல்லாய் கட்டுரையில் தன்னை வம்பவாரிசு என நிறுவிக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளார்.

தான் எழுதும் கட்டுரையைப் படிப்பதற்கான ஆர்வத்தை தூண்டுகின்றேன் என்று ஒருவகை கண்ணாம் பூச்சி ஆட்டத்துடன் கட்டுரையை ஆரம்பிக்கும் ஜெயராஜ் முதலில் புலம்பெயர்ந்தோர் தமது தமிழ்மொழியை மறந்துவிட்டனர் என்ற குற்றச்சாட்டை "தமிழ் இன்னும் ஞாபகத்தில் இருக்கின்றதா?" எனக்கேட்டு இளக்காரமாக முன்வைக்க முயல்கின்றார். அதற்கு உதாரணமாக அவர்கூறியுள்ள கதையை கேளுங்கள்.

"அண்மையில் சுவிஸிலிருந்து வந்திருந்த என் அக்காவின் பேரன் தன் மாமனைப் பார்த்து கேட்டானே ஒரு கேள்வி. ஊரே சிரித்துவிட்டது போங்கள். தன் அன்புப் பேரனுக்கு என் அக்கா ஆசையாசையாய் ஆனை வாழைப்பழம் வாங்கிக் கொடுக்க அவன் அதைத் தின்னும் அவதியில், குளிக்கத் தயாராய் துண்டோடு கிணற்றடியில் நின்ற தன் மாமனிடம் கொண்டோடிப்போய் பிளீஸ் அங்கிள் வாழைப்பழத்தை ஒருக்கா கழட்டித்தாங்கோ என்று கேட்க எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அந்த மாமன் அக்கேள்வியால் பதறியடித்து இடுப்பில் இருந்து துண்டை இறுகப் பொத்திய காட்சி கண்டு எங்கள் ஊரே சிரித்தது. வாழைப்பழத்தை உரித்து தாருங்கள் என்பதற்கு பதிலாக கழட்டித்தாருங்கள் என்கிறது ஈழத்தமிழினத்தின் பொறின் (foreign) வாரிசு."

குழந்தையின் மழலைக் கூற்றிலும் வம்பு எண்ணந்தான் மேலெழுகின்றது கம்பவாரிசுக்கு. தனது மனவக்கிரத்தை மற்றவர்களிலும் தொற்ற வைக்கின்றார் ஆத்மீகவாதியான வம்பவாரிசு. அவர் கூறிய உதாரணத் திற்கும் புலம்பெயர்ந்த சமூகக் குழந்தையின் தமிழ் அறிவிற்கும் என்ன சம்பந்தம் என்றே புரியவில்லை. பாவம் அவர் மழலை மொழியை கேட்டதில்லைப்போலும். அந்தப் பேரக்குழந்தைக்கு கழட்டித் தாருங்கள் என்ற ஒரு தமிழ் வினைச்சொல் தெரிந்திருக்கின்றது. சிரிக்கவும் சுவைக்கவும் கூடியதான குழந்தைகளின் மழலைப் பேச்சுக்கள் ஏராளம் உண்டு.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குழந்தைகளின் மழலைபற்றி ஆய்வு செய்திருக்கிறார் என்பதெல்லாம் கட்டுரையாளர் அறிந்திருக்கமாட்டார். ஆகக் குறைந்தது வள்ளுவனின் குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர் என்ற குறளைத் தன்னும் அவர் அறிந்திருந்தால் இப்படி எழுதியிருக்கார். அதனைவிட உலக அறிவிலும் கிணற்றுத் தவளைதான் (இராமாயணம் குட்டை என்பதால் குட்டைத் தவளை என்பதும் அவருக்கு பொருந்தலாம்) என்பதை கட்டுரை முழுவதிலும் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார். இக்கட்டுரையைத் தொடர்ந்து படிக்கையில் அதனைப் புரிந்து கொள்வீர்கள்.

அதற்கு முன் மழலைமொழி புரியாமல் ஜெயராஜ் கூறிய கதையில் சுவிசில் இருந்து வந்த அந்தக் குழந்தை பிளீஸ் அங்கிள் என்று ஆங்கிலம் பேசியதாம். சுவிசில் வழக்கில் உள்ள மூன்று மொழிகளில் ஆங்கிலம் உட்படவில்லை என்பதுடன் அக்குழந்தை சுவிசின் எந்தப் பகுதியில் வாழ்ந்ததோ அந்த மொழிச் சொற்களைத்தான் தமிழுடன் கலந்திருக்கும் அதுதான் இயல்பாக இருந்திருக்கும் என்பதோ அவருக்கு புரிந்திருக்காது. அந்தக் குழந்தையும் கதையும் கம்பவாரிதியினால் வம்புத்தனத்திற்காக காமரசத்திற்காக இட்டுக்கட்டியது என்றே துணிந்து கூறலாம்.

இவருடைய வம்புத்தனத்திற்கு மேலும் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டலாம். அவரின் கூற்றுக்களைப் படியுங்கள். "கூலி வேலை செய்யும் இடத்தில் வெள்ளைக்கார எஜமான்களிடம் நல்ல பெயர் வாங்க தலைமயிரை மட்டுமன்றி கால்மயிரையும் மழித்துக் கொள்கின்றனர் நம்காரிகையர்."; "பதின்மூன்று வயதான பருவ எல்லையில் நிற்கும் உங்கள் பாலகியின் பட்டராலும் சீசாலும் கொழுத்துக் கிடக்கும் தொடையின் முக்கால் பாகம் தெரியும் காற்சட்டை போட்டாகிவிட்டதா?"

கம்பவாரிதியின் காமப்பார்வை மன்னிக்க வேண்டும் அருள்பார்வை எவ்விடங்களைத் துழாவுகின்றது, மேய்கின்றது என்று தெரிகின்றதல்லவா? இப்போது ஜெயராஜை நான் ஏன் வம்பவாரிசு என விழிக்க முனைந்தேன் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்.

ஜெயராஜின் கட்டுரையில் எள்ளல் மொழியில் இகழப்படும் விடயங்கள் என்னவென்றால் புலம்பெயர்ந்த தமிழர் மொழியை, பண்பாட்டை, மரபை மறந்து செல்கின்றனர் என்பதும், அவர்கள் போலியான பணப்பகட்டு காட்டுகிறார்கள் என்பதும்தான். "சும்மா சொல்லக் கூடாதையா, அங்கிருந்து நீங்கள் ஆடின ஆட்டத்தில் இங்க எங்கட ஆணிவேரே ஆடிப்போனது உண்மையிலும் உண்மை" என்னும் அவருடைய கண்ணோட்டத்தில் நியாயம் இருக்கக்கூடும். ஆனால் அவரது சொல்லல் முறையும், பயன்படுத்திய மொழியும்,

www.tamilarangam.net



தகவல் தரவுகளும், அவருடைய ஆலோசனைகளும் மிகவும் நயவஞ்சகமானது நஞ்சூட்டப்பட்டது.

புலம்பெயர்ந்த சமூகம் பற்றிய ஆய்வுகளும் விமர்சனங்களும் சமூக ஆர்வலர்களால் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் இங்கே ஊடகங்களில் ஆரோக்கியமான முறையில் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. நோய்க்கு வைத்தியம் செய்ய மருத்துவ படிப்பு வேண்டும். அனுபவப் பயிற்சி வேண்டும். அதேபோல்தான் சமூக நோய்க்கு ஆலோசனை சொல்ல சமூகப் அக்கறை வேண்டும் அனுபவப் பயிற்சி வேண்டும். நோய்க்கூறு கொண்ட நோயாளியை மருத்துவர் இகழ்ச்சியுடன் அருவருப்புடன் அணுகமுடியாது. இது தொழில்சார் விழுமியம் சார்ந்தது. அறம் சார்ந்தது.

கட்டுரையாளர் கம்பவாரிதிக்கு சமூகம், சமூகவியல் பற்றியோ வரலாறு பற்றியோ எதுவும் தெரிந்திருக்க வில்லை. அறமும் அவரிடமில்லை (இத்தனைக்கும் அவர் ஆத்மீகவாதியாம்?). அதனால் தான் தனது இராமாயணக் குட்டையின் எல்லைதாண்டி, வரம்புமீறி வம்பும் வக்கணை யுமாக சொற்களை உதிர்க்க முடிந்திருக்கின்றது. சமூகத்தை எள்ளி நகையாட முடிந்திருக்கின்றது.

இதன் மிகுதி அடுத்த இதழில்.❑

வாராதே! வரவல்லாய்... தொடர்பான உங்கள் கருத்துக்களையும் எமக்கு எழுதி அனுப்பவும்.

## வம்பவாரிசே இனி இங்கே வாராதே நீ வரவல்லாய்...

கம்பவாருதி ஜெயராஜ் புலம்பெயர்ந்தவர்களுக்கு ஒன்றும் புதியவர் அல்ல. அடிக்கடி ஐரோப்பா, கனடா எனப் பறப்பவர். தமிழர்களின் கலாச்சாரம், பண்பாடுகளைப் பரப்ப வேண்டும் என்ற நோக்கத்தில் தான் கெஞ்சிக் கூத்தாடி வருகிறார். ஜெயராஜ்க்கு விமானக் கட்டணமும் சொற்பொழிவொன்றுக்கு £50 படி £500 கொடுக்கின்றனர். இதற்கு மேல் தட்சணை. வெளியே சென்று உழைப்பு. இதுதெல்லாம் தப்பில்லை. ஆனால் வாராதே! வரவல்லாய். என்று கூற ஜெயராஜ் யார்? எந்த உரிமையில் எங்கள் சொந்தங்களிடம் வரக்கூடாது என்று சொல்லகிறார்.

இலண்டன் வந்து வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தில் சொற்பொழிவாற்றிய கம்பவாருதியை அவரது நண்பர் வீட்டில் இறக்கி விட்டு வரும்போது முத்துக்குமார சுவாமி யோககுமார்(29) கார் விபத்தில் தலத்திலேயே பலியானார். இச்சம்பவம் இக்கட்டுரை பிரசுரமாவதற்கு சில வாரங்களுக்கு முன்னர் கடந்த டிசம்பர் 13ல் இடம் பெற்றது. இந்த விபத்திற்கு ஜெயராஜ் எந்த வகையிலும் பொறுப்பாளியல்ல. ஆனால் அவ்இளைஞன் இவரது நலன்களைப் பேணவதில் அக்கறையாக இருந்தவர். ஆனால் கட்டுரை எழுதும் போது ஜெயராஜக்கு அதெல் லாம் மறந்து போய்விட்டது வேதனையானது. வம்பவாரிசே இங்கே வாராதே நீ வரவல்லாய்... இரவி(இலண்டன்)

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality
Employment
Land Lord & Tenant
Housing
Welfare Benefits
Matrimonial

Tel : 020 8478 5797
Fax : 020 8478 4486

1ST Floor
128 Ilford Lane, Ilford
Essex, IG1 2LE

www.tamilarangam.net



நவஜோதி யோகரட்ணம்
வானொலிக் கலைஞர்



# நாடகம்

கலைகள் சமுதாய உணர்வோடு பின்னிப் பிணைந்து, சமுதாய வரலாற்றுடன் பல்வேறு வடிவங் களில் வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. ஆரம்ப கட்டத்தில் சடங்குகளிலிருந்தே நாட்டியம், நடனம், கூத்து ஆகியன தோன்றின என சமூகவியலாளர்கள் கூறுவர். காலப்போக்கில் மாற்றங்களின் வடிவங்களாக நாடகம், சினிமா எனத் தரிசிக்க முடிந்தது.

நாடகக்கலை காலந்தோறும் மாறுதலுற்று வளர்ந்து வந்திருக்கிறது. ஐரோப்பிய நாடகங்களின் தொடர்பால், தமிழில் சமுதாய நாடகங்கள் தோன்றி வளரலாயின. அக்காலத்தில் ஷேக்ஸ்பியர், வாழ்க்கையை ஆராய்ந்து, அதன் உணர்ச்சிகளையும், ஆசைகளையும், போராட்டங்க ளையும் அதன் இயல்புகளோடு அமைத்து வெற்றி பெற்றார். அவர் நாடகங்களை பல்வேறு வகையான மனப்பான்மை உடையவர்களின் நோக்கங் களையும் மனதில் இருத்தி அமைத்ததனால், சிறந்த நாடக ஆசிரியராக இன்றும் போற்றப் படுகின்றார். இங்கிலாந்தில் இன்றும் அவரது நாடகங்கள் மேடையேறுகின்றன.

**சினிமாவிலும் பார்க்க நாடகம் அழுத்தமானது என்றே கூறலாம். நாடகத்தில் வார்த்தைகளைப் பேசும் சதையும் இரத்தமும் கொண்ட மானிடர்களை பல்வேறு சூழலில் மேடையில் பார்க்கின்றோம். மேடையில் கற்பனையில் மிதக்கும் அதீதங்களைக் கொண்டு வருவது கடினம். அதனால், நாடகத்தில் யதார்த்தத்தன்மை மிளிர்கின்றது.**

அவரது நாடகங்களை உற்று நோக்குவோமெனில் பாமரர் ரசிக்கக்கூடிய செயல்களும், சண்டைக் காட்சிக ளும், நாகரீக மக்கள் விரும்பிடும் அழகான உரைத் தொடர்களும், நகைச்சுவையான பேச்சுக்களும், கற்றறிந்தவர்களுக்கு வேண்டிய கருத்துக்களும், உரையாடல்களும், இளைஞர்களுக்கு வேண்டிய காதல், வீரம் செறிந்த பகுதிகளும், எல்லோரையும் பொதுவாகவே கவரும் ஆடல், பாடல்களும் என்று அனைத்துத் தரத்தினரும் விரும்பும் வகையில் செறிந்திருப்பதை அவதானிக்கலாம்.

நாடகத்தை, நடிப்பதற்கு மட்டும் உரியனவாகவும், படிப்பதற்கு மட்டுமே உரியனவாகவும், நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்றவையாகவும் மூன்று வகையாக வகுத்தனர். முன்னையது மேடை அனுபவம் மட்டும் கொண்டு இலக்கியப் பயிற்சி இல்லாமல் எழுதப்படுவது, அடுத்தது மேடையனுபவம் இல்லாமல் இலக்கியப் புலமையை மட்டும் கொண்டு எழுதப்படுவது, மூன்றாவது இருவகையாலும் தேர்ச்சிபெற்ற கலைஞரால் எழுதப்படுவது. இந்த மூன்றாம் வகையான நாடகங்களே கலைச்சிறப்பு உடையனவென்று கருதப்படுகின்றது.

நாடகம் கண்ணாலும் செவியாலும் நுகரத்தக்க கலையாகும். எனவே நாடகக்கலைஞர், கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில், மெய்ப்பாடு விளங்க நடிக்கும் நடிப்புத்திறனும், செவிக்கு விருந்தளிக்கும் வகையில் உணர்வுகள் விளங்க நடிக்கும் நடிப்புத்திறனும் ஒருங்கே கொண்டிருக்க வேண்டும்.

வானொலி நாடகங்கள் செவிக்கு மட்டும் விருந்தாவன. ஆதலினால் வானொலி நாடகங்களில் உரையாடல் மிகப் பொருத்தமாகவும், காட்சிப் படிமங்களை உரையா டல்களின் வாயிலாகவே முன் நிறுத்தும் வகையிலும் அமைய வேண்டும். அத்துடன் சிறிது வேறுபட்டு விளக்கம் மிக்க உரையாடலுடன் அமைவதும் சிறப்பாக அமையும்.

கதை எழுதுபவர் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அவரின் எண்ணத்திற்கேற்ப விரும்பியபடி விளக்கிச் சொல்லலாம். ஆனால் நாடகம் குறித்த சிறிது நேரத்தில் கண்டும், கேட்டும் நுகரத்தக்கது. ஆகையால் செயல் களாலும், பேச்சுக்களாலும் உணர்த்துவனவற்றை மக்கள் விரைவாகவும், தெளிவாகவும் உணரத்தக்கவாறு உரையாடல் அமைதல் வேண்டும். இதனால் நாடகம் எழுதுபவரின் பொறுப்பு அதிகமாகின்றது.

சினிமாவை பார்வையூடகம் என்பார்கள். ஆரம்ப காலங்களில் வார்த்தைகள் இல்லாமலே சினிமா பலம் வாய்ந்த ஊடகமாக வளர்ந்து வந்தது. ஆனால்

www.tamilarangam.net





ஈழத்து நாடக வரலாற்றில் முககிய பாததிரத்தைக் கொண்டுள்ள அவைக்காற்றுக் கழகத்தினர் இலண்டன் மேடையில்.

சினிமாவிலும் பார்க்க நாடகம் அழுத்தமானது என்றே கூறலாம். நாடகத்தில் வார்த்தைகளைப் பேசும் சதையும் இரத்தமும் கொண்ட மானிடர்களை பல்வேறு சூழலில் மேடையில் பார்க்கின்றோம். மேடையில் கற்பனையில் மிதக்கும் அதீதங்களைக் கொண்டு வருவது கடினம். அதனால், நாடகத்தில் யதார்த்தத்தன்மை மிளிர்கின்றது.

மேடை நாடகத்தில் இருவகை வசன அமைப்புக்கள் கையாளப்படுகின்றன. பாத்திரங்களுக்கு ஏற்ப சாதாரணமாகப் பேசும் வாய்மொழியும் இலக்கிய நயம் மிக்க மேடை மொழியுமே அவையாகும். ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மேடையில் பார்ப்பவர்களிலும் பார்க்க, அவற்றினை நூலில் படித்துச் சுவைத்து மகிழ்பவரே அதிகமாயிருந்தனர். அதன் காரணம், நாடக வசனங்களை இலக்கிய நயம் சொட்ட அவர் வெளிக்காட்டியிருந்தார்.

தற்போதைய சூழ்நிலைகளில் திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை பெருகியதன் காரணத்தினால் நாடக அரங்குகளும் நாடகங்களும் குறைந்து, வீட்டினுள் இருந்து வானொலியின் நாடகங்களைக் கேட்பதும், தொலைக்காட்சி நாடகங்களைப் பார்ப்பதும் மக்களுக்கு வழக்கமாகிக் கொண்டு வருகின்றன. அவற்றின் வாயிலாக நடிகர்களின் சுவைத்திறன் மக்களை நாடி, அவர்கள் இருக்கும் இடத்திற்கே வருகிறது. இவ்வகையில் ஏற்படும் மாறுதல்களால் நாடக மேடை செல்வாக்கு இழந்து வருகின்றது. இது வருந்தத்தக்க விடயமாயினும் தடுக்க முடியாத ஒன்றாகும்.

நாடகக்கலை வெறும் மகிழ்வூட்டுதலை மட்டுமன்றி, சமூகப் பணியில் முக்கிய அங்கமாகவும் ஓங்கி நிற்பதை அவதானிக்க முடிகின்றது. ஈழத்துப் படைப்பாளிகளிடம் இருந்தும் கணிசமான அளவில் கவிதை, சிறுகதை, நாவல் என்ற வகையில் படைப்புக்கள் என்றுமில்லாத அளவில் உருவாகிக் கொண்டிருப்பதைக் காண முடிகின்றது. ஆயினும் நாடக இலக்கிய வளர்ச்சி மற்றைய இலக்கிய வடிவங்களைப் போலல்லாது வளர்ச்சிகுன்றியிருப்பது கவலைக்குரியதாக உள்ளது.

காலத்தைப் பிரதிபலிப்பனவாகவே கலை, இலக்கியங்கள் அமைகின்றன. அந்தவகையில் நாடகங்கள் ஒருகாலகட்ட உணர்வுகளைப் பிரதிபலித்து வந்தபோதிலும், பிரபல்யமான நாடகங்கள் நூலுருவம் பெறாமையால் காலப்போக்கில் அவை மறந்து, மறைந்து போய்விடுகின்றன. நாடக வசனங்கள் நடிப்பதற்கு மட்டும் தான் படிப்பதற்கு அல்ல என்று கருதியதனாலோ என்னவோ பல நாடகங்கள், நூலுருவம் பெறாது, படித்துச் சுவைக்க முடியாது போய்விட்டன. எனவே இனிமேலாவது இவை நூலுருவம் பெறுவது பயனுள்ளது. ❑

அரங்க முயற்சியில் ஈடுபடுவோர் மத்தியிலும் ஒற்றுமை இல்லை. உதிரிகளாகச் செயற்படுவோர் பலர் கருத்து முரண்பாடுகளுக்கப்பால் ஒன்றுபட்டுச் செயற்படுவார்களாயின், பிரமிக்கத்தக்க அரங்க வளர்ச்சியை எம்மண்ணில் எதிர்பார்க்க முடியும். ஆனால், குழுமயப்பட்ட சிந்தனைகளும், ஒருவர் மற்றவரை ஆதரிக்க முயலாத பிற்போக்குத்தனமும், நட்புறவற்ற தன்மையும், முற்சார்பான சிந்தனைகளுடன் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளும் மனப்பக்குவமுள்ள நிலையுமே எமது அரங்கியலாளர்களிடையே காணப்படுகின்றது. "தாம் செய்வதே தரமான நாடகம்" என்று நினைக்கும் மனப்பக்குவமுடையோரே அதிகமாக உள்ளனர். இது மிகுந்த வேதனைக்குரிய விடயமாகும்.

1970, 1980களில் ஏற்பட்ட ஆரோக்கியமான அரங்க வளர்ச்சிப்புலத்தை தற்போது காணமுடியாதுள்ளது. கலைத்துவ நுட்பம்மிக்க தகைசார் கலைஞர்கள் உருவாக்கம் குன்றியுள்ளது. கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வைரமுத்து, தலைக்கோல் பிரான்சிஸ் ஜெனம்... என்று வளர்ந்த சிறந்த நடிகர் பரம்பரையை இப்போது காண முடியாதுள்ளது.

எமது சிந்தனைகளை மீள்விசாரணை செய்து எமது அரங்க முஸ்தீபுகளை ஏனைய அரங்க கலைஞர்களுடனான உறவை ஆய்வுசெய்து முற்சார்பான சிந்தனைகளை தவிர்த்து க்றொட்டோவிஸ்கி கூறுவதுபோல, "நடிகன் வாழ்வில் போடும் முகமூடிகளைக் களைந்து, உண்மைப் பிளம்பாய் மாறவேண்டும்"

நன்றி : ஆற்றுகை, யாழ்ப்பாணம் - குமுதம்

www.tamilarangam.net



# ஏகலைவன் தாகம் கனவுகள் அழியாத கவிதை

த ஜெயபாலன்

இலண்டன், பிராங்பேர்ட், ஹொலன்ட், பரிஸ் என ஐரோப்பிய தமிழ் நகரங்களில் ஈழவர் திரைக்கலை மன்றத்தின் தாகம், கனவுகள், அழியாத கவிதை, ஏகலைவன் ஆகிய குறும்படங்கள் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இயக்குநர்களும் கலைஞர்களும் சொந்த முதலீட்டிலேயே படங்களைத் தயாரித்து வந்தனர். ஆனால் ஈழவர் திரைவிருந்தில் பரிஸ்டர் ஜோசப் (படத்தில்) பல ஆயிரம் பவுண்கள் முதலிட்டு தயாரிப்பாளர் ஆகியுள்ளார். அவருடைய இந்த முயற்சி பாராட்டுக்குரியது

ஈழத்துத் திரைப்படங்கள் வர ஆரம்பித்த காலங்களில் அது ஒரு குழந்தை என்றும் இப்போது தான் தவழுகிறது என்றும் கூறப்பட்டது. ஆனால் 40 வருடங்களுக்குப் பின்னும் இக்குழந்தை தவழ்கிறது. இதில் இருந்து எழும்ப வேண்டும் நடக்க வேண்டும் என்ற நோக்கில் படைக்கப்பட்ட ஈழவர் திரைவிருந்து அந்த நோக்கத்தை நெருங்கியதா என்பது சந்தேகமே. ஐரோப்பாவில் வெளிவந்த படங்களில் அருந்ததியின் 'முகம்' ஒரு திருப்பு முனையென விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் அதன் பின் அப்படி ஒரு படைப்பு உருவாகவில்லை என்பது வருத்தமானது. ஆகவே கோரஸ் பாடுபவர்களை நம்பிக் கோட்டை விடாமல் புலம்பெயர் சினிமா பற்றிய விரிவான மீளாய்வு ஒன்று செய்யப்படுவது மிகவும் அவசியம்.

மக்களிடம் படைப்புகளை எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனும் போதே படைப்புகள் மக்களுக்காக உருவாக்கப்பட வேண்டும் என்ற விதி முறைக்குள் படைப்பாளி தள்ளப்படுகிறார். ஆத்ம திருப்திக்காகவும், கலைக்காகவும் படைக்கின்றோம் என்று இனிச் சொல்ல முடியாது. பார்வையாளனே படத்தின் வெற்றியையும் தோல்வியையும் நிர்ணயிக்கிறான். படைப்பாளிகள் பார்வையாளனைத் திருப்திப்படுத்துவதிலேயே அவர்களின் வெற்றி உள்ளது.

நான்கு படங்களில் ஏகலைவன் நாட்டுக் கூத்தில் பங்கு கொண்ட கலைஞர்களின் நடிப்புத் திறன் அபாரமானது. பாராட்டுக்குரியது. ஏகலைவன் சிறந்த நாட்டுக் கூத்து. ஆனால் அது ஒரு திரை வடிவம் அல்ல. அருகி வரும் இக்கலை வடிவங்களைப் பாது காக்கும் முயற்சிகள் பாராட் டப்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் தாயகத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அடுத்து மனோவின் 'தாகம்' 15 நிமிடக் குறும்படம். மனித பலவீனங்களில் ஒன்று புகைத்தல். சுருட்டு புகைக்க ஆலாய் பறக்கும் நோய்வாய்ப்பட்ட மனிதர் (யேசுரட்ணம்) சுருட்டு புகைக்க மேற்கொள்ளும் எத்தனங்கள். புகைக்க முடிந்ததா? இதுவே கதைக்கரு. யேசுரட்ணத்தின் நண்பர் ரகுநாதன் வந்ததற்கான காரணம் காட்சிப்படுத்தப்பட வில்லை. அதனால் ரகுநாதனின் காட்சி அவசியமற்ற ஒன்றாகவேபட்டது. யேசுரட்ணம் தனது மகள் வரும் வரை காத்திருந்து சுருட்டைப் பத்த வைக்க முயன்றது போன்றே காட்சி அமைந்திருந்தது. சுருட்டு மீது இருந்த தாகத்தை இயக்குனரோ ஒளிப்பதிவாளரோ அழுத்தமாகக் காட்ட வில்லை. சுருட்டு புகைக்க அவருக்கிருந்த வெவ்வேறு தடைகளைக் காட்டி இருந்தால் அந்தத் தாகத்தை பார்வையாளன் புரிந்து கொண்டிருப்பான்.

25 நிமிடங்கள் கொண்ட அஜீவனின் 'அழியாத கவிதை' படத்தின் முக்கிய பாத்திரமான புலம்பெயர்ந்த தந்தையாக ஏ ரகுநாதன் நடித்தார். தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த ஒரு தந்தை எதிர்நோக்கும் பிரச்சினைதான் இந்த அழியாத கவிதை. கதை நகர்த்தப்பட்ட விதத்தில் யதார்த்தம் தென்படவில்லை. இலண்டன் வந்த சில நாளிலேயே அவர் தனியாக சட்டத்தரணியிடம் செல்கிறார், கடற்கரைக்குச் செல்கிறார், வீட்டுக்கதவு தட்டும் போது அவரே திறந்து பதிலளிக்கிறார். இன்னொரு காட்சியில் கற்பனையில் பாடல் ஒலிப்பதாகத் தோன்றியது. ஆயினும் ஒரு வெள்ளையர் வந்து கதவைத் தட்டி கூச்சலிடுகிறார். ஒலித்த பாடல் கதவைத் திறக்கு முன்னரே திடிரென நின்றது. காட்சிகள் தொடர்புபடுத்தப்படவில்லை. 'அழியாத கவிதை' தொழில்நுட்பம் சிறப்பாகவே அமைந்திருந்தது. ஆனால் 'நிழல் யுத்தம்' ஏற்படுத்திய தாக்கத்தை அஜீவன் 'அழியாத கவிதை'யில் கோட்டை விட்டுவிட்டார்.

கதையம்சத்தால் கவர்ந்தது என எடுத்தால் டேமியன் சூரியின் நகைச்சுவையுடன் எடுக்கப்பட்ட 55 நிமிடப் படம் 'கனவுகள்'. தயகத்தில் இருந்து மணப் பெண் இறக்குமதி செய்யப்படுகிறாள். பிரான்ஸிற்கு வந்தவள் உண்மையைக் கண்டு அதிர்ச்சி அடைகிறாள். திருமணத்திற்கு வந்தவருக்கும் திருமணத்திற்கு காத்திருந்தவருக்கும் இடையேயும் சுற்றியும் நிகழும்

www.tamilarangam.net



சம்பவங்கள் படமாக்கப்பட்டு உள்ளது. மாப்பிளையினதும் சகோதரியினதும் நடிப்பு, நண்பர்களின் கிண்டல், கேலி சபையோரிடம் வரவேற்பைப் பெற்றது. சில இடங்களில் மிகைப்படுத்தப்பட்ட நடிப்பு.

தாகம், அழியாத கவிதை, கனவுகள் குறும் படங்களாக இருந்த போதும் விறுவிறுப்பில்லை. இதனால் சலிப்பு ஏற்படுகின்றது. குறும்படங்களிலேயே காட்சிக்கு பஞ்சம். சோகமான முகத்தையும் முகட்டை அண்ணாந்து பார்த்துக் கொண்டு இருப்பதையும் குறுக்குமறுக்காக நடப்பதையும் கல்லெறிவதையும் மெகா சீரியலாக இழுத்துக் காட்டுகிறார்கள்.

வெளியிடுவதற்கு முன்னரே பார்த்து சில திருத்தங் கள் மேற்கொள்ளப்பட்டு இருந்தால் பல அம்சங்கள் சரிசெய்யப்பட்டு இருக்கும். மேலும் புலம்பெயர் சினிமாவை அறிமுகப்படுத்தும் போது குடும்பத்துக்கு £25, தனிநபருக்கு £10 என்பது மிகவும் அதிகம். சட்டத்துறை வருமானம் பார்வையாளனுக்கு கிடைப்பதில்லை என்ற யதார்த்தம் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியம்.

கலைஞர்களது முயற்சி பாராட்டப்பட வேண்டும். மசாலா படங்களாக இல்லாமல் புலம்பெயர் வாழ்வியலை வைத்து படம் எடுக்க முயற்சி எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. அடுத்தடுத்த படங்கள் சிறப்பாக அமையும் என நம்புவோம். ❑

***சிரிப்பு சிந்திப்பு*** **:** சுரேஸ்குமார் (கனடா)

**செர்பிய ஜனாதிபதி :** எனது இரணுவம் போல் உங்கள் இராணுவமும் சிறுபான்மை இன மக்களைக் கொன்று குவித்தது. அப்பாவிப் பெண்களைக் கற்பழிப்புச் செய்தது. பல கோடி ரூபாய் சொத்துக்களை அழித்தது. ஆனால் என்னைக் கைது செய்து விசாரணை செய்துவரும் நாடுகள் உங்கள் மீது மட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்காததன் இரகசியம் என்ன?

**ஜனாதிபதி சந்திரிகா :** அதுவா! நான் சமாதானத் திற்கான யுத்தம் என்று கூறிக் கொண்டு யுத்தம் செய்தேன். நீங்களும் அவ்வாறு கெட்டித்தனமாக செய்திருந்தால் உங்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க மாட்டார்கள்.

## யேசுவுக்குத் தெரியுமா??

காயத்திரி கொன்ஸ்டன்ரை

*யேசுவுக்குத் தெரியுமா??....*
*பிறர் தாரத்தை விரும்பாதே*
*என்று நறுக்காக கூறிவிட்டு*
*மறைந்துவிட்டார்........*
*பிறர் தாரம் என்னை விரும்புவது*
*அவருக்கெங்கே தெரியப் போகிறது.*


# Langorf Hotel & Apartments

20 Frognal, Hampstead, London, NW3 6AG

## DO YOU NEED ACCOMODATION IN LONDON ?

**Tastefully Furnished Hotel Bedrooms,**

**Self Catering Apartments or Flats Suitable for Families or Individuals.**

**Ten Minutes Away From Oxford Street.**

**We are pleased to offer 25% discount to any "Thesam" readers wanting accommodation in London.**

Tel : 0207 794 4483 Fax : 0207 435 9055
E -mail : info@langorfhotel.com Web : www.langorfhotel.com

தமிழில் தொடர்புகளுக்கு : 07919 444 994


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பருவமடைவது எப்போது?



ரி கொன்ஸ்ரன்ரைன்

சன்றைஸ் வானொலி

புலம்பெயர்ந்த நாடுகளில் எடுக்கப் படுகின்ற 95 வீதமான படங்கள் 20 -30 நிமிடங்கள் கொண்ட குறும்படங் கள். இவை ஏதோ எல்லாம் பரிசு பெற்றதாகக் கூறப்பட்ட போதிலும் இவை சராசரி புலம்பெயர்ந்த தமிழர்க ளுக்கு பரிச்சயமில்லை. கடந்த ஆண்டு புலம் பெயர்ந்தவர்களின் சில திரைப்படங்கள் தீபம் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. ஆனால் இவை மக்களின் கவனத்தை பரவலாக ஈர்க்கவில்லை. இதற்கு பல வியாக்கியானங்கள் கொடுக்கப்படு கின்ற போதிலும் அடிப்படையில் பார்வையாளர்களால் வரவேற்கப்பட வில்லை என்ற கசப்பான உண்மை யை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

சிலர் முழுநேரத் திரைப்படங்க ளைத் தயாரிப்பதில் ஆர்வம் காட்டு கிறார்கள். கீர்த்தியின் ‘இரகசிய சிநேகம்’, சண்ணின் ‘சொர்க்கத்தின் அகதிகள்’, ‘தீர்வு’ ஆகியன கோடம் பாக்கப்பாணியில் எடுக்கப்பட்டு உள்ளது. அதனால் இவர்கள் தங்களுக்கென்று ஒரு அடையாளத் தைத் தக்க வைக்கத் தவறிவிட்டனர். கோடம்பாக்கத்துடன் சரிசமமாகப் போட்டியிடுவது இயலாத காரியம். அதனால் மக்களின் வரவேற்பைப் பெறுவதில்லை.

மற்றுமொரு முழுநீளத் திரைப் படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளவர் புதியவன் (ராசையா சண்முகலிங்கம்). ‘மாற்று’ படத்தை இயக்கிய இவர் ‘கனவுகள் நிஜமானால்’ என்ற அடுத்த படத்திற்கான படப்பிடிப்பை ஆரம்பித்து உள்ளார். தொழில்நுட்பம் உட்பட பல அம்சங்கள் தரமானதாக இல்லாவிட்டாலும் ‘மாற்று’ தனக்கென ஒரு அடையாளத்தை பதிக்க, ஏற்படுத்த முனைந்து உள்ளது.

நிதி, சந்தைப்படுத்துதல் என்று ஆரம்பம் முதல் பார்வையாளனை தியேட்டருக்குள் வரவைப்பது வரை இயக்குநரே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. நிதி, படப்பிடிப்பு, தொழில்நுட்பம், உடை அலங்காரம், ஒலி, ஒளி என பல தரப்பட்டவர்களும் இணைந்து வேலையை பகிர்ந்து கொள்ளாத வரை வெற்றிகரமான தரமான படங்க ளை நம்மவர் தயாரிப்பது மிகவும் சிக்கலாகவே இருக்கப் போகிறது.

ஈழத்திரைப்பட இயக்குநர்களிடை யேயும் ஈடுபாடு உடையவர்களிடமும் உள்ள பொதுவான பிரச்சினை இந்தி யத் திரைப்படங்களைத் தவிர்த்து தமது திரைப்படத்தை கட்டாயம் பார்த்து ஊக்குவிக்க வேண்டும் என ஒற்றைக் காலில் நிற்பது தான்.

திரைப்படம் ஒரு பொழுது போக்கு அம்சம். இதில் வாழ்வா? சாவா? என்ற பிரச்சினை தேவையில்லை. மக்கள் ஈழத்துத் திரைப்படங்களை பார்க்கி றார்கள் இல்லை என்றால் அதற்கு படம் எடுத்தவர்கள் தான் காரணம். மக்கள் அல்ல. கைதட்டவில்லை என திட்டி கைதட்டு பெறுவதில் அர்த்தமில் லை. துப்பாக்கி முனையில் அரசியல் நடாத்திய நாம் பயமுறுத்தி படங்க ளை ரசிக்க வைக்க முடியாது.

1963ல் ‘தோட்டக்காரி’ படம் முதலாவதாக எடுக்கப்பட்ட போது கன்னி முயற்சி என்று கூறப்பட்டது. 1975ல் ‘கோமாளிகள்’, ‘தெய்வம் தந்த வீடு’, ‘காத்திருப்பேன் உனக் காக’, ‘வாடைக்காற்று’ போன்ற படங்கள் வெளிவந்த போதும் ஈழத் தமிழனின் கன்னி முயற்சி என்றே கூறப்பட்டது. இன்று 40 வருடங்களுக் குப் பிறகும் சண், புதியவன், ஜோசப் போன்றோர் கன்னி முயற்சி என்றே கூறுகின்றனர். அப்படியானால் நாங்கள் எப்போது கன்னி கழிவது? எப்போது குடும்பம் நடத்துவது?

உண்மை என்னவெனில், இந்தியத் திரைப்படங்கள் மிகவும் நல்ல பொழுது போக்கு அம்சமாக வளர்ந்து விட்டது. அதில் ஊடுருவி நம் வெற்றிக்கான எமது முத்திரையிட்ட திரைப்படங்களை வெளிக்கொண்டுவர வேண்டும். பரவலாகப் பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும். வெற்றி அடைகிறோமோ தோல்வி அடைகி றோமோ ஈழத்துத் திரைப்படப் போட்டி களை வைத்து பரிசில்கள் கொடுத்து மக்கள் மத்தியில் ஜனரஞ்சக வழியில் ஊடுருவ வேண்டும். இதைவிட்டுவிட்டு ஆளுக்கொரு மூலையில் இரண்டு மூன்று பேருடன் சங்கங்களைத் தொடங்கி இந்தியத் திரைப்படங்க ளைத் திட்டித்தீர்த்துக் கொண்டிருந் தால் 2100இலும் கன்னியாகத் தான் இருக்க வேண்டும். ❑

## சிறப்பு முகாமில் 13 வருடங்கள் சென்னையில் வழக்குத் தாக்கல்

13 ஆண்டுகளாக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக் கும் இலங்கையர்களான லிங்கம்(39) மற்றும் வசந்தன் ஆகிய இருவர் தம்மை விடுவிக்கக்கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் பெப்ரவரியில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்விருவரும் செங்கல்பட்டில் உள்ள முகாமிலேயே தடுத்து வைக்கப்பட்டு உள்ளார்கள்.

லிங்கம் ஜுன் 1991 இல் வேதாரணியத்தில் வைத்து சிபிஐ இனால் கைது செய்யப்பட்டார். வசந்தன் 1991 ஒக்டோபரில் திருச்சி யில் கைது செய்யப்பட்டார். ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டு உள்ளதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள், தடா நீதிமன்றத்தில் குற்றவாளியாகவோ சாட்சியாகவோ நிறுத்தப்பட வில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண்கள் தினம்




## புலம்பெயர்ப் பெண்கள்

விஜி

கையிற் குழந்தையுடன்
காலைக் கடன் முடிக்கும்
கலிகால அடிமைகள் நாம்.

பாதி உணவில்
கை உதறி எழுந்து - நீர்
ஏவும் வேலை எதுவானாலும்
ஏற்றுச் செய்யும்
இயந்திரங்கள் நாம்.

வெளியே சென்றுவரும்
ஒவ்வொரு வேளையிலும்
வரிசையாய்
துரத்தும் கட்டளைகள் கண்டு
மௌனமே கொள்கிறோம்.


பசியும் களைப்பும்
எமக்கும் உண்டென்று
ஏனோ சொல்ல முடிவதில்லை.

குழந்தையின் நனைந்த உடையை
மாற்றிவிடும் உதவி கேட்டால்
1200 பவுண்கள்
உழைப்பது நானா, நீயா?
ஆங்காரக் கூச்சலிலே
இறுகிய முகம் கண்டு
அச்சத்தில் உறைகிறோம்.

வீட்டிலே உழைத்தாலும்
வேலையில் இருந்தாலும்
மனிதராய் எம்மை
யாருமே மதிப்பதில்லை - ஆனாலும்
ஊரெல்லாம் முழுங்கும்
நாம் எல்லாம்
நன்றாய் வாழ்வதாக.

★ ★ ★

மார்ச் 8 சர்வதேச பெண்கள் தினத் தையொட்டி சுமதி, சாரு, விஜி ஆகியோர் பகிர்ந்து கொண்ட கருத்துக்களும் விஜி வடித்த கவிதையும் இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இனிவரும் இதழ்களில் பெண்கள் தினம் பற்றிய மேலதிக கட்டுரைகள் வெளிவரும். அத்துடன் சில நேர்காணல்களையும் பிரசுரிக்க உள்ளோம். உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களை யும் புகைப்படத்துடன் அனுப்பி வைக்கவும்.



### சுமதி ஜீவன் :

சிறு வயதில் தாய் தந்தையரை இழந்தவர். 1986ல் சுதந்திரப் பறவைகள் இயக்கத்தில் சேர்ந்து செயற்பட்டவர். யாழ் கோட்டை தாக்குதலின் போது ஒரு காலை இழந்தார். 1992ல் போராளி ஜீவனைத் மணம் செய்தார். 1997 ல் இந்தியாவில் மேலூர் சிறப்பு முகாமில் குடும்பத்துடன் அடைக் கப்பட்டார். இரு வருட சிறை வாழ்க்கையின் பின்னர் தற்போது அகதி அந்தஸ்து பெற்று லண்ட னில் இருக்கின்றார். லண்டனில் உள்ள பெண்கள் தொண்டு நிறுவனம் ஒன்றின் உதவி மூலம் சிறப்பு முகாமில் உள்ள சிலரின் விடுதலைக்கு வழி செய்துள்ளார். வெண்புறா அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு தன்னால் இயன்ற உதவிகள் செய்து வருகிறார்.

“மண் விடுதலை அடைந்த பின்பே பெண் விடுதலை பெற முடியும். எமது தலைவர் பிரபாகரன் தலைமையில் எமது மண் விடுதலை பெறும்போது பெண் விடுதலையும் நிச்சயம் கிடைக்கும். சகல பயிற்சியும் பெற்ற மாபெரும் பெண்கள் படையணி இப்போது உண்டு. அது இறுதி வெற்றி அடையும் வரை உறுதியுடன் போராடும்.” சுமதி ஜீவன்.

www.tamilarangam.net



சாரு :

பெண் விடுதலை ஆர்வலர். இவர் தன்னை வெளிப் படுத்த விரும்பாததால் புனைப் பெயரில் தனது கருத்தை முன்வைத்து உள்ளார். அவரது கருத்து:

பெண்கள் விழிப்புணர்ச்சி, முன்னேற்றம், வளர்ச்சி பற்றிப் பேசும் அமைப்புகள்; ஆண்களுக்கு எதிரானவை என்ற தவறான அபிப்பிராயம் நிலவுகின்றது. பெண்களின் வளர்ச்சியும் முன்னேற்றமும் முதற்படியாக வீட்டிற்கு பயனுள்ளதாகின்றது. அதுவே விரிவடைந்து முழுச் சமூகத்திற்கும் நாட்டிற்கும் நன்மை பயக்கின்றது.

இரு தலைமுறைகளுக்கு முன் பெண்கள் கல்வி அறிவில் பின்தங்கி இருந்தார்கள். ஆண்களே எல்லா முடிவுகளையும் எடுத்தார்கள். பெண்களிடம் கருத்துக் கேட்கும் அவசியம் இருக்கவில்லை. இன்று பெண்களிடம் அறிவு வளர்ச்சியும் ஆய்வு செய்யும் தன்மையும் வெளிப் பட்டு வருகின்றது. பெண்கள் கூறும் சரியான விடயங்களையும் பழக்கதோஷத்தால் ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களும் உள்ளனர். சரியானதை ஏற்க மறுப்பது உண்மையை மறுப்பதாகும். இது வருத்தத்திற்குரியது.

ஒவ்வொரு நாளும் எத்தனையோ புத்தம் புதிய விடயங்கள் நடக்கின்றன. முடிந்தவரை அவற்றை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் இவ்வுலகம் பற்றி ஆழ்ந்த பார்வையைப் பெற முடியும். பெண்களே தமது தேவைகள் இனம்கண்டு அதற்குரிய வழிகளைத் தேடி அடைய வேண்டும். தங்கள் முன்னேற்றத்திற்கான அடிப்படைகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

விஜி :

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். பெண்கள் விடுதலை தொடர்பாக ஆழுத்தமாகக் குரல் கொடுப்பவர். எழுத்தாளர். விமர்சகர். சர்வதேச பெண்கள் தினம் தொடர்பாக அவரது கருத்து:

பெண்கள் தினம் என்பது வருடத்தில் ஒரு நாள் ஊர்வலம் போய் மாநாடுகள் நடத்தி கூடிப் பிரிவது அல்ல. பெண்கள் தங்கள் மீதான சகல விதமான பாரபட்சங்களுக்கு எதிராக மேலும் உறுதி பெற்று இன்னும் அதிகமாய் உழைக்க உறுதி பூணும் நாளாகும்.

எங்கள் சமூகத்தில் பெண்கள் சம்பந்தமான விடயங்கள் முழுமையான புரிதலுக்கு உட்பட்ட ஒன்றல்ல. அவரவர் தேவைக்கேற்ப இதை ஒவ்வொருவரும் பயன் படுத்துகிறார்கள். பெண் விடுதலை என்றால் என்ன என்று பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் புரிந்து கொள்ள வேண்டும். பெண் என்றால் யார் என்ற மதிப்பீடு நியாயத் தன்மையோடு உணரப்படும் போதே பெண் விடுதலை அடைவாள். அதன் பின்பே ஆணும் பெண்ணும் சேர்ந்து இச்சமூகத்தை அதன் நாகரீக மேன்மைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் வழிகள் பிறக்கும்.

ஆண்களுக்குள்ள அதே உரிமைகளும் சந்தர்ப்பமும் உலகின் எப்பாகத்திலும் பெண்களுக்கு இல்லை.
உலகில் 1.3 பில்லியன் பெண்கள்
மிகவும் மோசமான வறுமையில் வாழ்கின்றனர்.
ஒரே உழைப்புக்கு பெண்களுக்கு ஆண்களை விட 35 வீதம் சம்பளம் குறைவாக வழங்கப்படுகிறது.

## பிரான்சில் முஸ்லீம் பெண்கள் பர்தா அணியத் தடை. உங்கள் கருத்து என்ன?



அண்மையில் பிரான்ஸ் தேசத்தில் முஸ்லிம் பெண்கள் பர்தா என்னும் தலை மறைப்பு ஆடையை அணியத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எந்தவித மத அடையாளங்களுடனும் பாடசாலை மற்றும் அரச அலுவலகங்களிற்கு செல்ல தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டு உள்ளது. இது குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றுள் சில


*(1)சமத்துவம் சகோதரத்துவம் சுதந்திரம் என்பனவற்றை உலகிற்கு தந்த பிரான்ஸ் நாட்டில் இப்படி ஒரு சட்டமா? என சிலர் ஆச்சரியப்படுகின்றனர். குறிப்பாக சிறுபான்மை முஸ்லிம் மக்கள் தமது கலாச்சார அடையாளங்களுக்கு எதிரான தடையாகவே இதை எண்ணுகின்றனர்.*

*(2)இன்னும் சிலர் இவ்வாறான மத நம்பிக்கைகள் மூடநம்பிக்கைகள். பகுத்தறிவுக்கு ஒவ்வாத கலாச்சாரங்கள் யாவும் ஒழிக்கப்படவேண்டியவைதான். எனவே இவற்றை தடை செய்யக் கொண்டுவரும் சட்டங்கள் யாவும் வரவேற்கப்பட வேண்டியனவே என்கின்றனர்.*

*(3)வேறு சிலர் முஸ்லிம் நாடுகளில் மற்ற மதங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே மற்ற மதங்கள் உள்ள நாடுகளில் உரிமை கோர முஸ்லிம்களுக்கு அருகதை இல்லை என்றும் கூறுகின்றனர்.*

**இது குறித்து வாசகர்களிடம் இருந்தும் கருத்துக்களை தேசம் எதிர்பார்க்கின்றது. கருத்துக்களுடன் புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைக்கவும். சிறந்த கருத்துக்கள் தேசம் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் அக்கருத்துக்களை எழுதி அனுப்பிய வாசகர்களுக்கு அடுத்த 3 தேசம் இதழகள் அனுப்பி வைக்கப்படும்.**

www.tamilarangam.net



**MP பரி கார்டினர்**

# அரசாங்க தரப்பிலும் புலிகள் தரப்பிலும் வில்லன்கள்

இலங்கையில் எந்த வளங்களும் இல்லாததால் சர்வதேச சமூகத்திற்கு இலங்கைப் பிரச்சினையில் ஆர்வம் அதிகம் இல்லை எனக் குறிப்பிட்டார் பிரித்தானிய பா உ பரி காடினர். இலங்கையின் 55வது சுதந்திர தினமான பெப்ரவரி 4ல் வெஸ்ற்மினிஸ்ர் பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்ற ஒன்று கூடலின் போதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். இலங்கை நண்பர்கள் (ஐ.இ) ஏற்பாடு செய்த இச்சந்திப்பில் பா உ பரி காடினர், பா உ அன்று லவ் ஆகியோர் கலந்து கொண்டனர். பரி கார்டினர் தொடர்கையில் சுதந்திரக் கட்சியினதும் ஜேவிபி இனது கூட்டு இனவாதமானது என்றும் குறிப்பிட்டார். அரசாங்கத் தரப்பிலும் விடுதலைப் புலிகள் தரப்பிலும் வில்லன்கள் இருப்பதாகத் தெரிவித்த பரி கார்டினர் அரசாங்கத்தின் மனித உரிமைமீறல்களும் கிழக்கில் முஸ்லீம்களுக்கு எதிரான புலிகளின் நடவடிக்கைகளும் புலிகள் சிறுவர்களை படைகளில் சேர்ப்பதுவும் வரைமுறைகளை மீறும் செயல் எனக் கண்டித்தார். சகல தரப்பினரையும் ஒன்றாக ஒரு இடத்திற்கு கொணர்ந்து ஒரு தீர்வை ஏற்படுத்த ஐக்கிய இராச்சியம் முயல்வதாகக் குறிப்பிட்ட பா உ அன்று லவ் விடுதலைப் புலிகள் முன் வைத்துள்ள தீர்வுத் திட்டம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பதைத் தான் விளங்கிக் கொள்வதாகவும் தெரிவித்தார். இலங்கை அரசாங்கம் வேண்டுகொள் விடும்பட்சத்தில் பிரித்தானியப் பாராளுமன்றக் குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி சமாதான முயற்சிகளை வலுப்படுத்த தாங்கள் தயாராக இருப்பதாக இரு பா உ க்களும் தெரிவித்தனர்.

கருத்துப் பரிமாற்றத்தில் கலந்து கொண்ட டி சில்வா விக்கிரமரத்தின, ஜேவிபி சுதந்திரக்கட்சி கூட்டை இனவாதக்கூட்டு என்று குறிப்பிட்டதைக் கண்டித்தார். ஐ.ஆர்.ஏ இடம் மட்டும் எப்படி வட அயர்லாந்தை கையளிக்க முடியாதோ அதுபோலவே விடுதலைப் புலிகளிடம் மட்டும் வடக்கு கிழக்கை ஒப்படைக்க முடியாது என அவர் விவாததித்தார். சமாதான காலத்தில் 70 தமிழர்கள் புலிகளால் கொல்லப்பட்டு உள்ளதாகவும் சிறுவர்கள் படையணிகளுக்கு சேர்க்கப்படுவதாகவும் விக்கிரமரத்தின குற்றம்சாட்டினார். அவர் ஒருபடி மேற்சென்று சதாம் குசைனை பிடித்தது போல் பிரபாகரனையும் பிடித்தால் இலங்கையில் சமாதானம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த டொக்டர் சிருனிவாசன் 50க்களிலும் 60க்களிலும் இரு சிங்களக் கட்சிகளும் தமிழ் மக்கள் மீது பரப்பிய இனவாத நோயின் விளைவுதான் பிரபாகரன் என்று குறிப்பிட்டார். அமிர்தலிங்கம் அரசாங்கத்திடம் இறுதிச் சந்தர்ப்பம் என்று கூறி ஒரு தீர்வுக்கு வருமாறு கேட்டபோதும் அதற்கு செவிசாய்க்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார் அவர். ஆனால் அமிர்தலிங்கத்தை அரசாங்கம் சுடவில்லையே எனப் பதிலளித்தார் விக்கிரமரத்தின.

இலங்கை மக்கள் அமைதி விரும்புபவர்கள். மேற்கு நாடுகள் குறிப்பாகப் பிரித்தானியா இலங்கைக்கு ஆயுதங்களை விற்பதை நிறுத்தினால் சமாதானம் ஏற்படும் என ஒருவர் கருத்துத் தெரிவித்தார். அதற்கு பெருத்த கரகோசம் கிடைத்தது. அவர் தொடர்ந்து பேசுகையில் கொலனித்துவ எஜமானர்களாலேயே இப்பிரச்சினைகள் உருவாகின எனக் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த அ சிவபாதசுந்தரம் சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகளுக்குப் பிறகும் கொலனிய எஜமானர்களில் பழியைத் தூக்கிப் போடுவதில் பலனில்லை எனக் குறிப்பிட்டார். இரு பெரும் கட்சிகளும் மாறி மாறி ஆட்சிக்கு வருவதற்காக இனவாதத்தை வளர்த்ததாக அ சிவபாதசுந்தரம் சாடினார். இப்பிரச்சினை தீர்க்கப்பட பொருளாதார அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார் டொக்டர் சிருனிவாசன்.

ஜேவிபி - எல்ரிரிஈ இரண்டுமே இனவாத அமைப்புகள் என ஒருவர் கருத்து வெளியிட்டார். சமாதான காலத்தில் தமிழர்கள் பலர் கொல்லப்பட்டதை சுட்டிக்காட்டிய ரிபிசி பணிப்பாளர் ராம்ராஜ் சாவகச்சேரியில் இரு மாதக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் புலிகளால் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டார். இவ்வாறான கொலைகள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தஞ்சம் கோரிய தமிழர்கள் சமாதானத்தின் பேரால் திருப்பி அனுப்பப்படக் கூடாது எனவும் ராம்ராஜ் கேட்டுக் கொண்டார்.

கருத்துக்களை குறித்துக் கொண்ட பா உ க்கள் அரசுக்கு இவற்றைத் தெரியப்படுத்துவதாகக் குறிப்பிட்டனர். இவர்கள் பாராளுமன்றத்தினதும் பொதுநலவாய நாடுகளினதும் இலங்கை விடயங்களில் முக்கிய பங்கு வகிப்பவர்கள். இலங்கை தொடர்பான வெளிவிவகாரக் கொள்கை வகுப்பில் இவர்களது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ❏

www.tamilarangam.net



# இலண்டன் கலை இலக்கிய நிகழ்வுகள்

அரங்காற்றுக் குழுவின் ஆடுகளம், அம்மையே அப்பா ஒப்பிலா மணியே, மயான காண்டம் ஆகிய நாடகங்களும் பொற்கூண்டு, இன்னுமொரு மனிதன் நடிப்புகளும் ஜனவரி 17. 18ல் ரூற்றிங்கிலும் லூசியத்திலும் மேடையேறியது. இந்நாடகங்களை அன்ரன் பொன்ராஜா தாயாரித்து இருந்தார். பிரான்ஸ், சுவிஸ், இலண்டன் என ஐரோப்பியக் கலைஞர்கள் இணைந்து வழங்கி இருந்தனர்.

புதியவனின் 'கனவுகள்' நிஜமானால் படத் தொடக்க விழா ரூற்றிங்கில் ஜனவரி 31ல் இடம்பெற்றது. இவ் விழாவில் கவுன்சிலரகள் போல், யோகநாதன், தயா இடைக்காடர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் 'மாற்று' படத்தின் கலைஞர்களுக்கு விருது வழங்கப்பட்டு 'கனவுகள் நிஜமானால்' படத்தின் கலைஞர் கள் அறிமுகப்படுத்தப்பட்டனர் (படம்). மண்டபம் நிறைந்த மக்கள் கலந்து கொண்ட விழாவில் பல குறும்படங்கள் காண்பிக்கப்பட்டது. Blink of the Eye என்ற குறும்படம் (கனடா) அனைவரது கரகோசத்தைப் பெற்றது.



மு.பொவின் 'சூத்திரர் வருகை' கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு பிரான்சில் ஜனவரி 10ல் அப்பால் தமிழ் ஆதரவிலும் பெப்ரவரி 8ல் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் ஆதரவிலும் இடம்பெற்றது. கரவைக்கவி வீரவாகு தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பா சபேசன், கிருஷ்ணராஜா, யமுனா ராஜேந்திரன் ஆகியோர் நூலை ஆய்வு செய்தனர். ஏற்புரை நிகழ்த்திய மு.பொ விடுதலை என்பது அதை வேண்டி நிற்கும் ஒவ்வொருவரதும் சிந்தனைக்கேற்ப அளவிடப்படு கின்றது. புகை பிடிப்பவன் தேடும் விடுதலைக்கும், ஒரு ஆயுதம் தாங்கிய விடுதலைப்போராளி காணவிளையும் விடுதலைக்கும், ஒரு ஆன்மீகஞானி தேடும் ஆத்ம விடுதலைக்கும் இடையே வேறுபாடு உள்ளது என்பதை விபரித்தார். அதே மண்டபத்தில் மாத்தளை சோமுவின் சிட்னியிலிருந்து நோர்வே வரை என்ற நூல் பெப்ரவரி 28ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

உங்கள் தேவைகளுக்கு ஏற்ப கணணிகளை வடிவமைத்துக் கொள்ள

Viveq Computers

0208 422 3422

www.tamilarangam.net

## தலைமறைவானவர்களைத் தேடி இன்ரர்போல் வலைவிரித்துள்ளது

இன்ரபோல் தமிழ் இளைஞரைத் தேடி வலைவிரித்து உள்ளது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் 20 கார் விபத்துத் தொடர்பாக கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ரட்ணம் யோகனும் அவருடன் குற்றம் சுமத்தப்பட்ட புஸ்பராஜா சின்னப்பயல் என்பவரும் தலைமறைவாகி உள்ளனர். கைது செய்யப்பட்டு பிரித்தானிய கிறவுன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட ரட்ணம் யோகன் (28), ராமசாமி நல்லகாந்தன் (28), புஸ்பராஜா சின்னப்பயல் ஆகியோரது வழக்கு பெப்.10க்கு ஒத்தி வைக்கப்பட்டது. கி.இலண்டன் மனோபார்க்கைச் சேர்ந்த மூவரில் ரட்ணம் யோகன் ஆபத்தாக வாகனத்தை ஓட்டி இருவரின் மரணத்துக்கு காரணமானதாக குற்றம்சாட்டப்பட்டு இருந்தது.

ரட்ணம் யோகன் பெப்.10ல் நீதிமன்றத்திற்கு வரவில்லை. பேர்லின் செல்ல விமானம் ஏறியதாக பொலிஸார் கூறுகின்றனர். புஸ்பராஜா சின்னப்பயல் பெப்ரவரி 10ல் நீதிமன்றத்தில் ஆஜரானார். பொலிஸ் நிலையத்தில் தினமும் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் அவருக்கு பிணை வழங்கப்பட்டது. ஆனால் இவர் கையெழுத்திட வரவில்லை.

## வீட்டுக்குப் பூட்டுப் போடுகிறார் ஆவரங்கால் சின்னத்துரை

தமிழ் தேசியக் கூட்டமைப்பு-TNA தமிழரசுக்கட்சியின்-த.க 'வீடு' சின்னத்தைப் பயன்படுத்தாமல் தடுக்க இலண்டனில் உள்ள த.க தலைவர் ஆவரங்கால் சின்னத்துரை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார். த.க இயங்காத போதும் பெயரும் சின்னமும் பாதுகாக்கும் நோக்கில் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. ஒரு பொது முடிவு எடுக்கப்படாமல் அச்சின்னத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தியதை அடுத்தே இச்சிக்கல் கிளம்பியது. சட்டநடவடிக்கை வரப்போகும் தேர்தலில் 'வீடு' சின்னத்தை பயன்படுத்துவதில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை. புலிகளுக்கும் TNAக்கும் அழுத்தத்தை வழங்கவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாகத் தெரியவருகிறது. ஆ.சின்னத்துரை சுயேட்சையாக பூட்டு சின்னத்தில் நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சங்கரிக்கு சார்பாகச் செயற்படுவதாக TNA குற்றம் சாட்டுகிறது.

## படுகொலைகள் வேண்டாம் - சர்வதேச மன்னிப்புச்சபை

ஏப்.2 தேர்தலில் தங்களுக்கு எதிரான அரசியல் தலைவர்களையோ ஆதரவாளர்களையோ படுகொலை செய்ய வேண்டாம் என தங்கள் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தம்படி வி.புலிகளின் தலைமையை சர்வதேச மன்னிப்புச்சபை குறிப்பாகக் கேட்டுள்ளது. பெப்.27 செய்திக்குறிப்பில் கட்சித் தொண்டர்கள் மீதோ தேர்தல் கண்காணிப்புக் குழு மீதோ வன்முறைத் தாக்குதல்களை நடத்த வேண்டாம் எனவும் கேட்கப்பட்டுள்ளது. ஏனைய கட்சிகளும் அவ்வாறே நடக்குமாறு பொதுவாகக் கேட்கப்பட்டு உள்ளனர். .இலங்கை முழுவதும் 100 அசம்பாவிதங்களும் 40 கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டதையும் அச்செய்திக் குறிப்பு சுட்டிக்காட்டி உள்ளது.

## பிரித்தானியாவில் தமிழர்களின் அரசியல் தஞ்சம்

2003ல் பிரித்தானியாவில் 705 தமிழர்களே தஞ்சம் கோரி உள்ளனர். (பிரதான விண்ணப்பங்கள்) 2000ல் 6,040 பேர் தஞ்சம் கோரி இருந்தனர். தற்போது தஞ்சம் நிராகரிக்கப்படுபவர்கள் 90 வீதத்திலும் அதிகம். 2003ல் பரசீலனைக்கு எடுக்கப்பட்ட 1,480 தமிழர்களின் தஞ்ச விண்ணப்பங்களில் 1,355 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. அக்காலப்பகுதியில் மேன்முறையீடு செய்யப்பட்ட 5,610 விண்ணப்பங்களில் 4,755 தள்ளுபடி (dismissed) செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் சமாதான காலத்தில் நடந்த 50க்கும் மேற்பட்ட படுகொலைகளை அடுத்து வி.புலிகளால் பாதிக்கபட்டவர்களின் விண்ணப்பங்கள் உள்துறை அமைச்சால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருவதாக கிழக்கு இலண்டன் சட்டவல்லுனர் ஒருவர் குறிப்பிட்டார்.

## இலங்கைப் பெண் விவகாரம் : நியூசிலாந்து அமைச்சர் பதவி பறி போனது

17 வயதான இலங்கைப் பெண் நியூசிலாந்தில் இருந்து வெளியேற்றப் பட்டார். இப்பெண்ணின் தஞ்சம் தொடர்பான ஆவணங்களை அந் நாட்டு ஊடகங்களுக்கு கசியவிடப்பட்டதால் குடிவரவுத்துறை அமைச்சர் லியான் டான்சியால் பெப்.27ல் பதவி விலகினார். குடும்ப உறுப்பினர்களால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளான இப்பெண்ணைத் திருப்பி அனுப்புவதைத் தடுககும் இணையத்தினூடான கையெழுத்துப் போராட்டம் உலகத் தமிழ் மக்களாலும் ஆதரவாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

## ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்க(ட)ங்கள்

ஜேர்மனியில் சுகாதாரக் கைநூல் வெளியீடு பெப்.8ல் நடந்தது. ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கப் பிரதிநிதி அரியநாயகம் வாழ்த்துரை வழங்குகையில் விழா ஏற்பாட்டாளர் பாக்கியநாதன் மைக்கைப் பிடிங்கி அநாகரிகமாக நடந்து கொண்டார். உங்கள் சங்கத்தவருக்கு இது மேடையல்ல என்றும் அவர் பேசியுள்ளார். குழப்பத்துடன் நிகழ்வு முடிவடைந்தது.

கரித்தாஸ், ஜேர்மன் அமைப்பின் உதவியுடன் இயங்கும் தமிழ் நூலகம் ஒன்றை பாக்கியநாதன் தம்பதிகள் குழு இயக்கி வருகின்றனர். இந்நூலகத்தை பொதுமக்கள் பயன்படுத்த விடுவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்டகாலமாக உள்ளது.

ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் கடந்த ஆண்டு உருவாக்கப்பட்டது. அச்சங்கம் சுயாதீனமாகவும் அதிக அளவு உறுப்பினர்களுடனும் ஊக்கத்துடன் இயங்கி வருகிறது. பாக்கியநாதன் தம்பதிகளும் போட்டியாக ஜேர்மனில் தமிழ் எழுத்தாளர்களின் ஒன்றியத்தை அமைக்கத் திட்டமிட்டனர். அது காழ்ப்புணர்வாகி மைக் பறிக்கப்பட்டது.

இதற்கிடையே புலம்பெயர் உலகத் தமிழ் எழுத்தாளர் ஒன்றிம் எனும் அமைப்பை வானொலி இயக்குநர் நாவே சிவனேசன் ஜேர்மனியில் உருவாக்கி உள்ளார்.

www.tamilarangam.net

1. கனவுகள் நிஜமானால் படத்தின் படப்பிடிப்புகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. முதலில் விட்ட தவறுகள் பலற்றையும் திருத்தி தரமான படம் ஒன்றை வழங்கப்போவதாக இயக்குநர் புதியவன் சபதம் எடுத்துள்ளார். இப் படத்தினை கொமேர்சியல் டைரக்ட் ரவிக்குமார் (படம்) தயாரிக்கின்றார். படத்தின் அனைத்து பட பிடிப்புகளும் கோடைகால முற்பகுதியில் முடிக்கப் பட்டு ஆண்டு நடுப்பகுதியில் திரையிட உள்ளனர். இத்துடன் சில குறும்படங் களையும் தயாரிக்க உள்ளனர்.



2. கலாநிதி இ நித்தியானந்தனின் பரதக்கலை வளர்ச்சி வெளியீடும் கருத்தரங்கும் பெப்.22ல் நடந்தது. புலி பாய்ந்தால் எலியல்ல யானை பிடிக்க வேண்டும் என சுவைபட விமர்சித்தார் இராஜமனோகரன். பேப்பர்களில் அரங் கேற்றம் பற்றி வருவதில்லை என்ற ஓய்வெடுக்கும் பத்திரிகையாளர் மாலி (சொ.விமல் விளக்கம்); புதினம் ராஜ கோபால், ராகினிக்கு கணவனானது ராகினி செய்த பாக்கியம் என நளின மாகத் தெரிவித்தார். சேர்ந்த நிதியை மலையகத்துக்கு அன்பளிக்க முடிவு.



3. கனடா எழுத்தாளர் இணையத்தின் 10வது ஆண்டு நிறைவுக் கவிதைப் போட்டியில் சிறந்த கவிதைக்கான முதற்பரிசான 300 கனேடிய டொலரும் சான்றிதழும் கவிஞர் மட்டுவில் ஞானகுமாரனின் 'ஆத்மா இன்னும் காத்திருக்கிறது' கவிதைக்கு வழங்கப்பட்டது. விருதினை கலாநிதி கவிஞர் கந்தவனம் வழங்கினார். ஞானக்குமாரன் (இடது) கந்தவனம் (வலம்) கவிதை அடுத்த இதழில்.



4. பரிசில் சி புஸ்பராஜாவின் 'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' நூல் வெளியீடு பெப்15ல் நடந்தது. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் (படம்), புஸ்பராணி, சேரன், கி பி அரவிந்தன், அசோக்யோகன், அருந்ததி, உமா காந்தன், புஸ்பராஜா, யோகலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

25 ஆண்டுகளாக கவிதை, மொழி பெயர்ப்பு, கலை விமர்சனம் ஆகிய துறைகளில் ஈடுபட்டுவரும் தமிழக எழுத்தாளர் இந்திரனுடனானசந்திப்பு பெப்21ல் பாரிசில் இடம்பெற்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்